Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

National TAMIL DAILY

தேசிய தினசரி

போன்: 389

தபாற் பெட்டிஇலக்கம்: 49

மலர் 3 யாழ்ப்பாணம், பிலவ புரட்டாசி 10 ஆம் நாள் ரபி ஆகிர் 15 (26-9-61) செவ்வாய்க்கிழமை இதழ் 192

நீங்கள் அணியும் ஆடைகள்
தூய வெண்மையாகத் திகழவேண்டுமானல்
இன்றே!
டொலர் அடையாளமிட்ட
நீலம் வாங்கி உபயோகியுங்கள்
விநியோகஸ்தர்கள்:
டொலர் கோப்பரேஷன்
14, டாம் வீதி, கொழும்பு.

# புதிய கைத்தொழில்

## பாடசாலை கனடா உதவியுடன் அமைக்கப்படும்

### 400 மாணவர்களுக்கு இடவசதி

கொழும்பு, திங்கள்

கொழும்பில் கைத்தொழில்பாடசாலை ஒன்றை அமைக்க கைத்தொழில் அமைச்சர் முடிவு செய்திருக்கிறர். பல்வேறு வர்த்தகங்களில் முழு நேரப் பயிற்சி பெற இப்பாடசாலை வாய்ப்பளிக்கும்.

கொழும்புத் திட்டத்தின் கீழ், கனடாவின் உதவியுடன் கட்டப்படவிருக்கும் இப்பாடசாலை சுமார் 400 மாணவர்களுக்கு பயிற்சியளிக்கும். கட்டிட நிர்மாணம், தச்சுத் தொழில், உலோகத் தொழில், மின்சாரத் தொழில், என்ஜினியரிங், அச்சுத்தொழில்ஆகியவற்றில்மாணவர்கள் பயிற்சி பெறுவார்கள்.

---

## சிங்களத்தில் தேர்ச்சி

கொழும்பு, திங்கள்

1957-ம் ஆண்டு தொடக்கம் 1960-ம் ஆண்டுவரை வருடாந்தமாக திறைசேரியின் சார்பில் பரீட்சைக் கமிஷனர் கொண்டு நடத்திய சிங்கள தகுதிப் பரீட்சைகளில் 11,651 அரசாங்க சேவையாளர்கள் தேறியுள்ளார்கள் எனத் தெரிகிறது. இவர்களில் 8,554 பேர் உயர்தரப் பரீட்சையில் சித்தியும், 3,096 பேர் சாதாரண சித்தியும் அடைந்துள்ளார்கள்.

1960-ம் ஆண்டின் அரசகரும மொழி விவகார விசேஷ கமிஷனர் அறிக்கையினுல் இப்புள்ளி விவரம் பெறப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், வவனியா, மன்னர், திருக்கோணமலை ஆகிய நகர கச்சேரிகளை விட மற்றைய இலாக்காக்கள் யாவும் சிங்கள மொழியிலேயே ஒன்றுடன் ஒன்று தொடர்பு கொண்டால்தான் சிங்களத்தைப் பல இலாக்காக்களிலும் கரும மொழியாக்கலாம் எனக் கமிஷனர் அறிக்கை கூறுகிறது.

சில தவிர்க்க முடியாத கஷ்டங்கள் சில இலாகாக்களில் உண்டு. எனினும் இப்போது அடைந்துள்ள தேர்ச்சியினுல் காலக்கிரமத்தில் அரசாங்க நிருவாகங்கள் யாவற்றையும் சிங்கள மொழியில் நடத்திக் கொள்ளலாம் என்பதை எடுத்துக் காட்டுகிறது என்று கமிஷனர் அறிக்கை மேலும் கூறுகிறது.

பல இலாகாக்களின் சட்டங்களும் விபர அகராதிப் புத்தகங்கள் யாவும் அரசகரும மொழி அமுல் செய்வதற்கென மொழி பெயர்க்கப்பட்டு விட்டன. அரசகரும நிருவாகத்திற்கென 23 புதிய சிங்கள நூல்கள் வெளியாகின வென்றும் கமிஷனர் அறிக்கை கூறுகின்றது.

## பங்கீட்டரிசி புத்தகம்

கொழும்பு, திங்கள்

அரிசிப் பங்கீட்டுப் புத்தகங்கள்மீது விதிக்கப்பட்டுள்ள வரியைச் செலுத்த விரும்பாது, அதற்குப்பதில் பங்கீட்டுப் புத்தகங்களையே திருப்பி ஒப்படைப்போர் நிதி மசோதா சட்டமாகியதும் அவ்வாறு செய்து கொள்ளலாம்.

பங்கீட்டரிசிப் புத்தகங்களைத் திருப்பி ஒப்படைப்பவர்கள் கூட்டுறவு பண்டகசாலைகளிலிருந்து 'மாசி' பருப்பு போன்ற உணவுப் பொருள்களைப் பெற்றுக்கொள்வதற்கான அடையாள அட்டைகளை வழங்குவதற்கு உணவுக் கமிஷனா மூலம் ஒழுங்குகள் செய்யப்பட்டு வருகின்றன.

ஒவ்வொரு பங்கீட்டரிசிப் புத்தகத்தின் மீதும் 24 ரூபாய் வரி விதிக்கப்பட்டுள்ளது.

---

## தபால் மூலம் கரன்ஸி நோட்டுக்கள்

கொழும்பு, திங்கள்

பெருந் தொகையான வெளிநாட்டு கரன்ஸி நோட்டுக்கள் இங்கிருந்து தபால் மூலம் அனுப்பப்படுவதாக தபால் இலாகா கண்டுபிடித்துள்ளது.

இந்தக் கரன்ஸி நோட்டுக்கள் கடிதங்களுக்குள்ளும், பத்திரிகைகளுக்குள்ளும், சஞ்சிகைகளுக்குள்ளும் வைத்து விமானத்தபால் மூலம் அனுப்புவதாக அறியப்படுகிறது.

காங்காங், இந்தியா, பாகிஸ்தான், இத்தாலி, சுவிட்சர்லாந்து, ஜெர்மனி ஆகிய தேசங்களுக்கே இவ்விதம் கரன்ஸி நோட்டுக்கள் அதிகமாக அனுப்பப்படுகின்றன என தபால் இலாகா அதிகாரி ஒருவர் தெரிவித்தார்:

சமீபத்தில் இந்தியாவுக்கு அனுப்பப்பட்ட ஒரு சிங்களப் பத்திரிகையை சந்தேகத்தின் மீது ஆராய்ந்தபோது அதற்குள் இந்திய கரன்ஸி நோட்டுக்கள் காணப்பட்டனவாம்.

---

## வர்த்தக அபிவிருத்தி சபை

கொழும்பு, திங்கள்

மத்திய கிழக்கு நாடுகளில் இலங்கையின் வர்த்தகத்தை அபிவிருத்தி செய்யும்பொருட்டு வர்த்தக மந்திரியின் ஆதரவில் ஒரு வர்த்தக அபிவிருத்தி சபை அமைக்கப்படவிருக்கிறது.

## அக். 31ல் ககாரின் விஜயம்

கொழும்பு, திங்கள்

சோவியத் வானவெளி வீரர் யூரி ககாரின், அடுத்த மாதம் 31ம் தேதி இலங்கைக்கு விஜயம் செய்து, இரண்டு நாள் இங்கு தங்குவார். இத்தகவலை கொழும்பிலுள்ள ரஷ்ய தூதராலய அதிகாரி ஒருவர் பிரதம மந்திரியிடம் அறிவித்தார்.

## 36 வாக்குகளைப் பெற்றவர் கிராமசபை அங்கத்தவரானுர்

யாழ்ப்பாணம், திங்கள்

புலோப்பளை கிராமச் சபையின் நாலாம்வட்டார இடைத்தேர்தலில் 36 வாக்குகளை மாத்திரம் பெற்றுக்கொண்ட திரு. கந்தர் விசுவநாதர் 4-ம் வட்டார அங்கத்தவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இந்த இடைத்தேர்தலில் மொத்தம் மூவர் போட்டியிட்டனர்.

---

இந்தியாவில்

## நிமிடத்துக்கு 25 குழந்தைகள் ஜனனம்

சென்னை, செப். 25

யூனியன் உதவி மந்திரி திருமதி தாரகேஸ்வரி சின்ஹா அண்மையில் ஓஷியானிக் ஹோட்டலில் நடந்த ரோட்டரி கிளப் கூட்டத்தில் பேசுகையில், குடும்பக் கட்டுப்பாடு குறித்து கிராமங்களில் எடுத்துச் சொல்வது மிகவும் முக்கியம் என்று கூறினுர். இந்தியாவில் ஒவ்வொரு நிமிடத்துக்கும் 25 குழந்தைகள் விதம் ஜனனமாகின்றன என்றும் அவர் கூறினுர்.

---

## தபாலாபீசில் 52,900 ரூபாய் இல்லை

கொழும்பு, திங்கள்

குருநாகல் தற்காலிக மாவட்ட தபால் சுப்ரீண்டன் திரு. கே. கனகரத்னம், அளவை தபாலாபீசில் நடத்திய ஒரு திடீர் சோதனையின் விளைவாய் 52,900 ரூபாய் கணக்கில் குறைவது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. போஸ்ட்மாஸ்டர் தற்காலிகமாக வேலையிலிருந்து நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறர்.

---

## நேரு டில்லி திரும்பினுர்

புதுடில்லி, செப். 25

கான்பூரில் கட்டப்பட்டு வரும் "ஆவ்ரோ 748" விமானத்தை பிரதமர் நேரு இன்று பார்வையிட்டுவிட்டு, புதுடில்லி திரும்பி வந்து சேர்ந்தார்.

## 5 வருடங்களில் சகலநாடுகளும் படைகளை குறைக்கவேண்டும்

### ஐ. நா: தலைவருக்கு ரஷ்யா அனுப்பியுள்ள அறிக்கை

மாஸ்கோ, செப். 25

அமெரிக்காவுடன் நடைபெற்ற ஆயுதப் பரிகரண பேச்சுவார்த்தை பற்றி ரஷ்யா விடுத்துள்ள அறிக்கை ஒன்றில், 4 அல்லது 5 வருடங்களில், அல்லது ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் சகல நாடுகளும் சகல படைகளையும் கலைத்துவிட வேண்டும் என்ற அம்சத்தை ஒப்புக்கொள்வதாகக் கூறியிருக்கிறது.

படைக் குறைப்பைக் கட்டுப்பாடு செய்யும் ஸ்தாபனத்தில் யார் யார் அங்கம் வகிப்பது என்னும்விஷயத்திலும், மற்றும் பல விஷயங்களிலும் அமெரிக்காவுடன் கருத்து வேற்றுமை இருப்பதாயும் அது கூறியிருக்கிறது. மேற்கு நாடுகள், கிழக்கு நாடுகள், நடுநிலைமை நாடுகள் ஆகிய மூன்று சாராரும் இந்த ஸ்தாபனத்தில் அங்கம் வகிக்க வேண்டும் என்பதே ரஷ்யாவின் நிலை என்னும் இந்த அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது.

ரஷ்யாவின் அறிக்கை ஐ. நா. தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது

---

ஹாக்கி

## மகாராஷ்டிரா கோஷ்டி வெற்றி

யாழ்ப்பாணம், திங்கள்

இன்று மாலை யாழ்ப்பாணம் ஹாக்கி கோஷ்டிக்கும், மாகாராஷ்டிரா ஹாக்கி கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற ஹாக்கி விளையாட்டுப் போட்டியில் மகாராஷ்டிரா கோஷ்டி, 5—0 கோல்களால் வெற்றிபெற்றது.

மகாராஷ்டிரா கோஷ்டி இடைவேளைக்கு முன் (ஆட்டம் ஆரம்பித்து 5 நிமிஷங்களில்) 2 கோல்களும், இடைவேளைக்குப் பின் 3 கோல்களும் போட்டது. குறிப்பாகப் பந்தை அடிப்பதிலும், பந்தைத் தடுத்து நிறுத்துவதிலும், லாவகமான குச்சி விளையாட்டிலும் எதிர்பார்த்தபடியே மகாராஷ்டிரா கோஷ்டி மிகவும் உயர்தரமாய் இருந்தது.

கோல் எதுவும் போடாவிடினும் யாழ்ப்பாணக் கோஷ்டி உற்சாகமுடன் விளையாடியது குறிப்பிடத்தக்கது.

மகாராஷ்டிரா கோஷ்டியில் 3 ஒலிம்பிக் வீரர்களுமிருந்தனர். இதுவரை இலங்கையில் விளையாடிய எல்லாப் போட்டிகளிலும் மகாராஷ்டிரா கோஷ்டி வெற்றி பெற்றிருக்கிறது.

## 3-ம திட்டத்தில் 25 லட்சம் வீடுகள்

புதுடில்லி, செப். 25

3-ம் ஐந்தாண்டுத்திட்டத்தில் 25 லட்சம் வீடுகள் கட்டப்படும் என்று அறிவிக்கப்பட்டது. வீடுகள் கட்டுவதில் ராஜ்ய அரசாங்கங்களுக்கு மத்திய அரசாங்கம் 182 கோடி ரூபாய் அளிக்கும்.

---

## உதவி வித்தியாதிபதிக்கு ரஸிக ரஞ்சன சபா வாழ்த்துரை

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாண ரஸிக ரஞ்சன சபாவின் நிர்வாகக்குழுவின் கூட்டமொன்று வண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமாள் கோவில் மண்டபத்தில் நடைபெற்றபோது உதவி வித்தியாதிபதியாகப் பதவி உயர்வு பெற்றுள்ள திரு. எஸ். யூ. சோமசேகரத்தைப் பாராட்டி அவருடைய முத்தமிழ்ப் பணியை வாழ்த்தியது.

உபதலைவர், இசைப்புலவர் சி. செல்லத்துரை தலைமை வகித்தார். வாழ்த்துச்செய்தி திரு. ஸி. வீரசிங்கத்தால் பிரேரிக்கப்பட்டு கோயில் தர்மகர்த்தா திரு. சி. பொ. செல்லையாவால் அனுவதிக்கப்பட்டது.

திரு. எஸ். யூ. சோமசேகரம் வட பிரதேச உதவி வித்தியாதிபதியாக நியமனம் பெற்றுள்ளமையைப் பாராட்டு முகமாக யாழ்ப்பாணம் வேலையற்றிருக்கும் தமிழ் ஆசிரியர் சங்கம் ஒரு பாராட்டு உபசாரக் கூட்டம் நடத்துவதென முடிவு செய்துள்ளது.

செல்வி. த. சரஸ்வதி தலைமையில் நடைபெற்ற இச் சங்கக் கூட்டத்தில் இப் பாராட்டுபசாரக் கூட்டத்தை அடுத்த மாதம் நடுப்பகுதியில் நடத்துவதெனவும், வவனியா, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களுக்கு கல்வி அதிகாரிகளாகப் புதிதாக நியமனம் பெற்றிருக்கும் திருமதி. ஆர். ஆர். நவரத்தினம், திரு. எஸ். தணிகாசலம் ஆகியோரையும் அதில் கலந்து கொள்ளுமாறு அழைப்பதெனவும், ஆசிரிய பயிற்சிக் கலாசாலை அதிபர்களையும் அழைப்பதெனவும் முடிவுகள் செய்யப்பட்டுள்ளன.




உ
சிவமயம்

**ஸ்ரீ முன்னேஸ்வர தேவஸ்தான கோடியர்ச்சனை விஞ்ஞாபனம்**

ஆரம்ப தினம்: 23—10—61
பூர்த்தி தினம்: 5—2—62

இந்த அர்ச்சனையில் யந்திரத் தகடு வைத்து பூஜை செய்து கொடுக்கப்படும்.

சி. பாலசுப்ரமணியக் குருக்கள்.

**உங்கள் நோய்**

குணப்படுத்த உத்தரவாதம். நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப் பத்திரங்ளடங்கிய கற்றலோக் (Catalogue) இனாம்.

வைத்தியர் பரிபூரணாநந்தர்,
கைலாசபிள்ளையார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.




# ‘மனிதகுலத்துக்குசேவைசெய்யும் ஸ்தலஸ்தாபன ஊழியர் பென்ஷன்வசதி கிடைக்கவேண்டும்’

நாவலப்பிட்டி, ஞாயிறு

ஸ்தலஸ்தாபனத் தொழிலாளர்கள் மனிதகுலத்திற்கு அளப்பரிய சேவையைச் செய்து வருகின்றார்கள். பயங்கர நோய் முதலியன பரவாவண்ணமும், எங்கும் துப்பரவு நிலவவும் அவர்கள் பெருமளவில் சுகாதாரத்தினைக் கட்டுக்கோப்பாக அமைவதற்கு உதவி புரிகின்றார்கள். ஆனால் அவர்கள் சேவையிலிருந்து இளைப்பாறும் பொழுது அவர்களுக்குப் போதிய பென்ஷன் வசதி அளிக்கப்படுவதில்லை. அப்படித்தான் சில இடங்களில் ஏதோ கிடைப்பதென்றாலும் அது அவர்களுடைய தேவையில் ஒரு சிறுபங்கைத் தானும் பூர்த்திசெய்வதற்குப் போதியதாக இல்லை. இந்த நிலை மாறுவதற்கு ஸ்தலஸ்தாபனத் தொழிலாளர்கள் ஸ்தாபன ரீதியாக ஒருங்கு திரண்டு தமது உரிமைகளைப்பெற முன் வரவேண்டும்".

இவ்வாறு திரு. சு. பிரேமசம்பு நாவலப்பிட்டியில் ஸ்தலஸ்தாபனத் தொழிலளர்கள் சார்பாக நடைபெற்ற கூட்டமொன்றில் பேசும்போது கூறினார். திரு. யு. நவரட்ண இக்கூட்டத்திற்குத் தலைமை வகித்தார்.

திரு. சு பிரேமசம்பு மேலும் பேசுகையில் கூறியதாவது;- உலகத்திலேயுள்ள யுத்தஆர்வமுள்ள வல்லரசுகள் பயங்கர ஏவாயுதங்கள் மூலம் தான் மனித குலத்தை அழிக்க முடியும். ஆனால் உலகெங்கிலுமுள்ள ஸ்தலஸ்தாபனத் தொழிலாளர்கள் செயலற்று விடுவார்களேயானால் அதனால் வல்லரசுகளின் ஏவாயுதங்களிலும் பார்க்க மிகப்பெரிய இடையூறு ஏற்படும் என்பதில் சந்தேகம் இல்லை. மேலை நாடுகளில் ஸ்தலஸ்தாபனத் தொழிலாளர்கள் பெரிதும் கௌரவிக்கப் படுகின்றார்கள். அவர்களுக்குச் சமூகத்திலோ அன்றி வேறெந்த இடத்திலோ எவ்விதபாகுபாடும் காட்டப்படுவதில்லை. ஆனால் நமது நாட்டிலே அவர்களது அந்தஸ்து மற்றவர்களிலும் பார்க்க குறைந்ததாக எண்ணப்படுகின்றது. இது மிகவும் விசனிக்கத்தக்கதாகும் மனித சமுதாயத்தைப் பொறுத்தவரையிலே பாகுபாட்டுக்கு இடமில்லை. ஸ்தலஸ்தாபனத் தொழிலாளர்கள் மத்தியிலே தாங்கள் மற்றவர்களிலும் பார்க்க அந்தஸ்தில் குறைவானவர்கள் என்ற தாழ்வு மனப்பான்மை இருக்கிறது. இப்படியான கோழைத்தனமான எண்ணம் கொள்வதை விட்டுவிட்டு தங்கள் சக்தியைக் குறுகிய மனப்பான்மைகளுக்கும் சாதாரண சிறு பிரச்சினைகளுக்கும் செலவழிக்காது விழிப்புணர்ச்சியுடன் சுயமாகச் சிந்தித்து தேசிய ரீதியில் ஏனைய சகதொழிலாளர்களோடு இணைந்து சமூகத்தில் சமபங்கு கொள்ள முயற்சிசெய்ய வேண்டும்.

## டயர், டியூப் தொழிற்சாலை ஒப்பந்தம் கைச்சாத்தானது

கொழும்பு, திங்கள்

இலங்கையில் டயர், டியூப் தொழிற்சாலை ஒன்றை நிறுவுவதென ரஷ்யா இலங்கையுடன் நேற்று முன்தினம் ஒப்பந்தம் செய்து கொண்டது. தொழிற்சாலை நிறுவுவதற்கு 280 லட்சம் ரூபாயை ரஷ்யா இலங்கைக்கு உதவுகிறது.

புதிய தொழிற்சாலை நிறுவி முடிந்த பின்னர் ‘டயர்’ உற்பத்தியினால் வரும் லாபத்தின் மூலம் தொழிற்சாலை நிறுவுவதற்கு ரஷ்யா வழங்கியுள்ள 280 லட்சம் ரூபாயை இலங்கை திருப்பிச் செலுத்தும்.

இந்த ஒப்பந்தத்துக்கு இலங்கையின் சார்பில் திறைசேரி உதவிக் காரியதரிசி திரு. சி. பாலசிங்கமும் ரஷ்யா சார்பில் ரஷ்யப் பொருளாதாரக் கார்ப்பரேஷனின் தலைவர் திரு. வி. டி. ஜவனெவ்வும் நேற்று முன்தினம் கைச்சாத்திட்டார்கள்.

## இத்தாலியில் கதிரியக்கம்

ரோம், செப். 25

இத்தாலியில் கதிரியக்கத்துகள் பெருமளவில் வீழ்ந்து கொண்டிருப்பதாக இத்தாலிய விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். சோவியத் யூனியன் சமீபத்தில் நடத்திவரும் அணு ஆயுதப் பரிசோதனைகள் தான் இதற்குக் காரணமெனக் கூறப்படுகிறது.

## கல்வி இலாகா சிக்கன நடவடிக்கை

### வித்தியாதிபதி அறிக்கை

கொழும்பு, திங்கள்

“கல்வி இலாகா பிரிக்கப்பட்ட பின்னர் மாவட்டக் கந்தோர்களிலுள்ள தலைமை அதிகாரிகளும் உதவி அதிகாரிகளும் பள்ளிக்கூட அதிகாரிகளுமே வருடாந்த நிதித் தேவைகள் பற்றிய முடிவுகள் செய்வதற்குப் பொறுப்பாளர் ஆவர்."

இவ்வாறு வித்தியாதிகாரி திரு. எஸ். எப். டி. சில்வா கல்விப்பகுதி சேவையாளர்களுக்கு விடுத்துள்ள அறிக்கை ஒன்று கூறுகிறது.

மாவட்ட கல்விக் கந்தோர்களில் கடமையாற்றி வரும் உதவிக் கல்வி அதிகாரிகளும் கல்விப்பகுதி ஏனைய கல்வி அதிகாரிகளும் கவ்விப்பகுதிச் சேவையாளர்கள் தொகையை ஒவ்வொரு வருடமும் டிசம்பர் மாத ஆரம்பத்தில் ஆராய வேண்டும் எனவும் வித்தியாதிகாரியின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் சம்பளத் திட்டம் உயர்வானதொன்றாக விருப்பதால் கல்விப் பகுதி சேவையாளர் சிக்கனமான முறையில் நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளவேண் எனவும் புதிய சேவையாளர் அவசியமாகத் தேவைப்பட்டால் தான் அவர்கள் நியமனம் செய்யப்பட்டு அவர்களுக்கெனப் பணம் ஒதுக்கப்படல் வேண்டும் எனவும் வித்தியாதிபதி கேட்டுள்ளார்.

## வெற்றி தோல்வியின்றி முடிவுற்ற கிரிக்கட் போட்டி

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணத்திலிருக்கும் கடற்படை வீரருக்கும், சுகாதார இலாகக் கோஷ்டிக்குமிடையே யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற சிநேகபூர்வமான கிரிக்கட் பந்தாட்டப் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

## பை களவாடியவர் பிடிபட்டார்

கம்பளை, திங்கள்

பிரயாணிகளின் பை ஒன்றைக் களவாடிய ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். முன்பு பலதடவை குற்றம் சாட்டப்பட்ட அவர், தனது மார்பில் ‘சிங்கள, பௌத்தய’ என்றும் கையில் ‘ஈவினிங் இன் பாரிஸ்’ என்றும் பச்சை குத்தியிருக்கின்றார்!

கம்பளை புகையிரத நிலையத்தில் பிரயாணிகளின் பை ஒன்றை ஒருவர் பறித்துக் கொண்டு ஓடுவதாக சிலர் கத்தினர். இதைக் கேட்ட சிலர் அந்தத்திருடனை துரத்திக்கொண்டு ஓடினார்கள். அந்தத் திருடன் வயல் ஒன்றைத் தாண்டி, தம்மைத் துரத்தி வருபவர்களுக்கு கிறிஸ் கத்தியொன்றைக் காட்டி பயமுறுத்தினன்.

இதைக் கேள்வியுற்ற கலால் இலாகா அதிகாரி திரு. ஜே. சி. எம். டயஸ் என்பவர் அவனைத் துரத்திப்பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்தார்.

# ‘எழுத்தாளர்உள்ளம் தூய்மை பெறவேண்டும்’

## மட்டக்களப்பு தமிழ் எழுத்தாளர் சங்க விழாவில் பேச்சு

காத்தான்குடி, திங்கள்

மட்டக்களப்பு தமிழ் எழுத்தாளர் சங்கத்தினர் நடாத்திய பரிசளிப்பு விழாவும், ‘பாரதி நினைவு மலர்’ வெளியீட்டு நிகழ்ச்சியும் சனிக்கிழமை நகரமண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. விழாவுக்கு கிழக்கு மாகாணச் சுகாதாரத்துறைத் தலைவர்டாக்டர் க.சிவஞானரத்தினம் தலைமை தாங்கினர். தலைவர் தமது தலைமைஉரையின் போது கூறியதாவது:-

“எழுத்தாளன் தன் உணர்ச்சிகளை எழுத்துமூலம் கவிதையாகவும், கதையாகவும், கட்டுரையாகவும் படைக்கிறான். இந்த உணர்ச்சிகள் நல்ல முறையில் வளர்க்கப்படவேண்டும். இல்லையேல் அவை மக்களுக்கு எதிர்பார்க்குமளவு பயன்தராது. அன்றியும் மக்களைவழ்ாவில் வழிதவறிச் செல்லவும் ஏதுவாகும். உணர்ச்சிக்கு மதிப்பளிக்கும்போது ஓர் எழுத்தாளன் சமூகத்தின் சீர்திருத்தத்துக்கு உழைக்கும் சிறந்த சேவைநிலையைப் பெறுவான். எனவே எழுத்தாளர்கள் தம் உணர்ச்சிகளைத் தூயவைகளாக்கி சக்திகொண்ட நல்ல தொண்டினைச் செய்ய வேண்டும்."

மட்டக்களப்பு ஆசிரியகலாசாலைத் தமிழ் விரிவுரையாளர் திருமதி கங்கேஸ்வரி கந்தையா குறிப்பிட்டதாவது:-

“எழுத்துத்துறையில் உழைக்கும் பொறுப்பு ஆசிரியர்களையே சார்ந்தது. மாணவர்களை இத்துறையில் ஊக்குவிக்க ஆசிரியர்கள் பின் நிற்கக் கூடாது. பேசவும், எழுதவும் மாணவர்கள் முயற்சி செய்யும் போது தூய தமிழ் நடை கையாளப்பட வேண்டும். வெறும் கவையான பேச்சுடன் மட்டும் அமையாது கருத்தமைவும் இருக்க வேண்டும். அப்போதுதான் அப் பேச்சு உண்மையான பேச்சாக அமையும். சொல்லடுக்கு மட்டும் இருப்பின் அது பயன் தராது. தமிழ் எழுத்தாளர் சங்கத்தினரின் நல் முயற்சியைப் பாராட்டுவதுடன், ஆசிரியர்களும் விபுலானந்த வித்தகன் பேணிக் காத்த முத்தமிழ் வளரப் பாடுபட வேண்டும்.

தமிழ் எழுத்தாளர் சங்க இணைச் செயலாளரான கவிஞர் திமிலைத்துமிலன் பாரதி நினைவு மலரைச் சமர்ப்பித்துப் பேசும் போது “எழுத்துலக சிற்பிகளுள் ஒருவரான பாரதிக்கு இம் மலரைச் சமர்ப்பிப்பதில் எமது எழுத்தாளர் சங்கம் பெருமை கொள்கிறது” என்றார்.

மலரின் விற்பனையை விழாத் தலைவர் ஆரம்பித்து வைத்த பின் கிழக்கு மாகாணக் கல்வி அதிகாரி திரு. ஏ. இராஜசூரியர் பேச்சு, கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகளை வழங்கினர். நிகழ்ச்சிகட்கிடையே இந்து மகளிர் நடனப் பாடசாலை மாணவிகளின் நடனவிருந்தும், வயலின், வீணைக் கச்சேரிகளும் இடம் பெற்றன.

விழாவின் இறுதியில் தமிழ் எழுத்தாளர் சங்க உறுப்பினர்களால் “போடியார்மகன் போடியார்” என்ற நகைச்சுவை நாடகம் ஒன்றும் இடம் பெற்றது.

## கைதிகளுக்கு மன்னிப்பு

கொழும்பு, திங்கள்

சிறைத் தண்டனைக் காலத்தின் போது நல்ல முறையில் நடந்துவந்த சிறைக் கைதிகள் பலருக்கு பண்டாரநாயக்காவின் நினைவு தினமாகிய செப்டம்பர் 26-ந் திகதியன்று மன்னிப்பு அளிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இவ்விஷயம்பற்றி உள்நாட்டு அமைச்சும் சிறைப் பகுதியும் பேச்சுவார்த்தைகள் நடத்தியுள்ளது. ஆனால் எத்தனை கைதிகள் விடுதலை செய்யப்படுவர் என்பது இன்னும் முடிவாகவில்லை.

## வான் விபத்தில் எண்மர் மரணம்

தங்காலை, திங்கள்

மஹியங்கானையிலிருந்து யாத்திரீகர்களை ஏற்றிக் கொண்டு வந்த ஒரு ‘வான்’ லுனுமாஹவேவா என்ற இடத்தில் ஒரு லொறியுடன் மோதியதில் ஒரு பெண்ணும் ஒரு மூன்று வயதுக் குழந்தையுமே காயங்கள் எதுவுமின்றி தப்பினர். லொறியுடன் மோதியவுடன் வான் தீபற்றி எரியத் தொடங்கியது. சம்பவம் நடைபெற்ற இடத்திலேயே மூன்று பேர் தீக்கிரையாயினர். காயமுற்ற 21 பேரில் ஐவர் அம்பாந்தோட்டை ஆஸ்பத்திரியில் மரணமடைந்தனர். மற்றவர்கள் நிலைமை கவலைக்கிடமாகவேயுள்ளதென அறிவிக்கப்படுகிறது.

அம்பாந்தோட்டை மாஜிஸ்ரேட் சம்பவம் நடந்த இடத்திற்குச் சென்று விசாரணை நடத்தினர். மேல் விசாரணை இன்று தொடர்ந்து நடைபெறும். லொறிச் சாரதி விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கிறார்.

## பேர்லின் ஜேர்மன் பிரச்சினையில்

# அவசியமேற்பட்டால் அணு ஆயுதங்களை அமெரிக்கா உபயோகிக்கும்

## ஜனதிபதி கென்னடியின் சகோதரர் தகவல்

வாஷிங்டன், செப். 25

"பேர்லின் ஜேர்மனியில் மேற்கு நாடுகளுக்குள்ள உரிமையைப் பாதுகாப்பதற்கு, அவசியமானல் அணு ஆயுதங்களை உபயோகிப்பதற்கு ஜனதிபதி கென்னடி உத்தரவிடுவார்" என்று அமெரிக்க அட்டர்னி ஜெனரலும் ஜனதிபதியின் சகோதரருமான திரு. ரொபர்ட் கென்னடி தெரிவித்தார்:

'டெலிவிஷன்' பேட்டியொன்றில் திரு. ரொபர்ட் கென்னடி இத்தகவலை வெளியிட்டார்.

பேர்லின், ஜேர்மனியில் நேச நாடுகளுக்குள்ள உரிமைகளை விட்டுவிட முடியாது. மேற்கு ஜேர்மனிக்கு நேச நாடுகள் செய்ய வேண்டிய கடமையையும் விட்டுவிட முடியாது. உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் கடமைகளைச் செய்வதற்கும் அவசியமேற்பட்டால் அணு ஆயுதங்களை உபயோகிக்க ஜனதிபதி அனுமதியளிப்பார் என்று திரு. ரொபர்ட் கென்னடி கூறினர். ராக்கெட்டுகளும் உபயோகிக்க அனுமதி அளிக்கப்படும் என்றும் அவர் சொன்னர். ஆனல் எந்தவிதமான ஆயுதங்கள் என்று விபரம் தெரிவிக்கவில்லை. அணு ஆயுதங்களை உபயோகிக்க அமெரிக்க தயாராக இருப்பதை அவர் தெரிவித்தார்.

"பேர்லின் ஜேர்மன் விஷயத்தில் அமெரிக்கா இப்பொழுது பணிந்து போனல் இனி தலை நிமிரவே முடியாது" என்று திரு. ரொபர்ட் கென்னடி குறிப்பிட்டார்.

## ஜேர்மன் "யுனெஸ்கோ" கமிஷன் கூட்டம்

"பாட் எம்ஸ் என்ற சிறு ஜெர்மன் நகரில் ஜெர்மன் "யுனெஸ்கோ" கமிஷன் அக்டோபர் மாதம் 3ந் திகதியிலிருந்து 5ந் திகதி வரை நடைபெறவிருக்கிறது. ஜெர்மன் பல்கலைக் கழகங்களிலும் கல்லூரிகளிலும் ஆசியா நாடுகள் பற்றி தகவல்கள், ஆராய்ச்சிகள் இவைகளைப் பரப்புவது குறித்து இக்கூட்டத்தில் ஆலோசிக்கப்படும். ஆசியா நாடுகளைப் பற்றி முக்கியமாக இந்தியாவைப் பற்றி அதன் அரசியல், சமூக முன்னேற்ற விபரங்களை எப்படிப் போதிப்பது என்பது குறித்து யோசனைகள் தெரிவிக்கப்படும். நிபுணர்கள் பலருடைய சொற்பொழிவுகளும் நடைபெறவிருக்கின்றன. ஜெர்மன் "யுனெஸ்கோ" கமிஷன் தலைவர் பேராசிரியர் ஆர்னல்ட் பெர்க்ஸ்டிரேஸர் இக்கூட்டத்திற்குத் தலைமை வகிப்பார்.

## காமன்வெல்த் பார்லிமெண்ட் மகாநாடு

லண்டன், செப். 25

காமன்வெல்த் பார்லிமெண்டரிச் சங்க மகாநாடு இன்று லண்டனில் ஆரம்பமாகிறது. 130பிரதிநிதிகள் கலந்துகொள்ளும் இந்த மகாநாட்டை எலிஸபெத் ராணியார் ஆரம்பித்து வைக்கிருர்.

உலகில் காமன் வெல்த் நாடுகளின் பணிபற்றியும் காமன் வெல்த் நாடுகளுக்கிடையே பொருளாதார ஒத்முழைப்பு பற்றியும் மகாநாடு ஆராயும்.


இந்த மகாநாட்டில் இலங்கை பார்லிமெண்ட் சபாநாயகர் திரு. ஆர். எஸ். பெல்பொலவின் தலைமையில் இலங்கை பார்லிமெண்ட் குழுவும் இந்திய லோக சபை சபாநாயகர் திரு. அனந்தசயனம் அய்யங்காரின் தலைமையில் இந்திய பார்லிமெண்ட் தூதுகோஷ்டியும் கவந்து கொள்கின்றன.

---

## விதர்பாவில் வெள்ளசேதம் ரூ. 5 கோடி!

புதுடில்லி, செப். 24

விதர்பா ராஜ்யத்தில் 8 ஜில்லாக்களில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கின் காரணமாய் 5 கோடி ரூபாய்க்குமேல் நஷ்டம் ஏற்பட்டிருப்பதாய் அறிவிக்கப்படுகிறது. 1,15,000 எக்கர் பயிர்களுக்குச் சேதம் ஏற்பட்டது. 900 க்கதிகமான கிராமங்களுக்கு அழிவு ஏற்பட்டது. 3400 வீடுகள் இடிந்தன. 5000 வீடுகளுக்குச் சேதம் ஏற்பட்டது. மகாராஷ்டிர நிதிமந்திரி இத்தகவலை அறிவித்தார்.




## அங்கோலாவில் புதிய போராட்டத் திட்டம்

### தேசியத் தலைவர் தகவல்

லண்டன், செப். 25

அங்கோலாவில் போர்ச்சுக்கீஸியரின் கொடுமையை எதிர்த்து அங்கோலாவின் விடுதலைக்காகப் போராடிவரும் தேசியவாதிகள் அடுத்த சில மாதங்களில் கடுமையான நிலைமைகளைச் சமாளிக்கவேண்டிவரும் என்று அங்கோலா தேசிய வாதிகளின் தலைவர் ஒருவர் தெரிவித்தார்.

போர்சுக்கீஸியரின் ஆயத்த நடவடிக்கைகளுக்கேற்ப தேசிய வாதிகளும் தங்கள் போராட்டத் திட்டங்களை மாற்றியமைத்துக்கொள்ள வேண்டியுள்ளதென்றும் போர்சுக்கீஸியருக்கு சரியான அடி கொடுக்க தேசிய வாதிகள் தயாராக இருக்கிருர்களென்றும் அவர் கூறினர்.

போர்ச்சுக்கலின் காலனி ஆதிக்க நாடான அங்கோலாவில் தேசியவாதிகள் விடுதலைக்காக பெரும் போராட்டம் நடத்தி வருகின்றனர். தேசியவாதிகளின் விடுதலைப் போராட்டத்தை அடக்கி ஒடுக்குவதற்காக பெருந் தொகையான படைகளை அங்கோலாவில் போர்ச்சுக்கல் குவித்துக் கொண்டேயிருக்கிறது.

ஆயிரக்கணக்கில்தேசியவாதிகள் கொல்லப்பட்டுவருவதாக பல்வேறு நாடுகள் வெளிப்படையாக போர்ச்சுக்கல் மீது குற்றம் சாட்டியுள்ளன. அங்கோலா நிலைமை பற்றி ஐ. நா. பொதுச் சபையும் விவாதிக்கவிருக்கிறது.

ஆயிரக் கணக்கான மக்கள் அங்கோலாவிலிருந்து அகதிகளாக வெளியேறி காங்கோவில் தஞ்சம் புகுந்துள்ளதாக காங்கோ பிரதமர் தெரிவித்துள்ளார்.

## ஈராக் புகாருக்கு பிரிட்டன் மறுப்பு

லண்டன், செப். 25

வடக்கு ஈராக்கில் ஈராக் அரசாங்கத்துக்கு எதிராக பிரிட்டன் கலகத்தை தூண்டிவிடுவதாக ஈராக் பிரதமர் ஜெனரல் காசிம் சுமத்திய குற்றச்சாட்டு ஆதாரமற்றது என்று பிரிட்டிஷ் அதிகாரி ஒருவர் இன்று கூறினர்.

ஈராக் அரசாங்கத்துக்கெதிராக வடக்கு ஈராக்கில் பிரிட்டனும் அமெரிக்காவும் கலகத்தைத் தூண்டிவிடுவதாகவும் பிரிட்டன் இந்த நடவடிக்கைகளை நிறுத்திக்கொள்ளாவிடில் பிரிட்டனிலுள்ள ராஜியத் தொடர்புகளை ஈராக் துண்டித்துக்கொள்ளுமென்றும் பிரதமர் ஜெனரல் காசிம் நேற்று முன்தினம் பாக்தாத்தில் பத்திரிகை நிருபர்கள் மகாநாட்டில் கூறியிருந்தார்.

---

## தேவாலயத்தில் விசேஷ பிரார்த்தனை

நியுயோர்க், செப். 25

காலஞ்சென்ற திரு. ஹமர் ஷீல்டின் ஆத்மசாந்திக்காக நியுயோர்க்கிலுள்ள தேவாலயத்தில் நேற்றுவிசேஷ பிரார்த்தனை நடைபெற்றது. சுமார் நான்காயிரம் மக்கள் இதில் கலந்துகொண்டனர். நியுயோர்க்கில் ஐ. நா. சபைக் கூட்டத்தில் கலந்துகொள்ளும் உலக நாடுகளின் பிரதிநிதிகள் பலரும், ஐ. நா. பொது சபைத் தலைவர் திரு. மொங்கிஸ்லிமும் இதில் கலந்துகொண்டனர்.

# சில்சார், கரிம்கஞ்சகலக பகுதிகளாக பிரகடனம்

## அஸ்ஸாம் ராஜ்ய மொழிச் சட்டத்திருத்தம் அங்கீகாரம்

ஷில்லாங், செப். 25

அஸ்ஸாம் ராஜ்ய மொழிச் சட்டத்தின் திருத்தத்தை அஸ்ஸாம் மந்திரி சபை அங்கீகரித்துள்ளது.

அஸ்ஸாம் ராஜ்யத்தில் கரிமகஞ்ச், கச்சார், சில்சார் பகுதிகளில் சமீபத்தில் மொழிக்கிளர்ச்சி ஏற்பட்டதும் இது சம்பந்தமாக இந்திய உள்விவகார மந்திரி அஸ்ஸாம் ராஜ்யத்துக்கு விஜயம் செய்து அஸ்ஸாம் ராஜ்ய அரசாங்கத்துடனும் கச்சார் ஜில்லா சங்க்ராமா பரிஷத், காங்கிரஸ் தலைவர்களுடனும் பேச்சுவார்த்தை நடத்தியதும் பின்னர் மொழிப் பிரச்சினைக்கு ஒரு திட்டம் கொடுத்ததும் வாசக நேயர்களுக்கு நினைவிருக்கலாம்.

திரு. லாவ்பகதூர் சாஸ்திரி தெரிவித்த திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு அஸ்ஸாம் ராஜ்ய மொழிச் சட்டத்திலுள்ள 'மகா கும்மா பரிஷத்' என்ற ஷரத்தை நீக்கிவிடும் புதிய திருத்தத்தை இன்று முதன் மந்திரி திரு. சாலீகா அஸ்ஸாம் ராஜ்ய சட்ட சபையில் கொண்டுவருவார்.

இதற்கிடையில் கச்சார் ஜில்லாவில் கரிம் கஞ்ச், சில்சார் ஆகிய இடங்களை கலகப்பகுதிகளாக அஸ்ஸாம் ராஜ்ய கவர்னர் ஒரு விசேஷ 'கஸட்' அறிவித்தல் மூலம் பிரகடனம் செய்துள்ளார். ஒரு மாதத்துக்கு இப்பிரகடனம் அமுலிலிருக்கும். கரிம் கஞ்ச், சில்சார் ஆகிய இடங்களில் மீண்டும் கலகத்தைத் தூண்டிவிடும் நோக்கத்துடன் ஆயுதந் தாங்கிய சிலரின் நடமாட்டம் அதிகரித்திருப்பதாகவும் இதன் காரணமாகவே இப்பகுதிகள் கலகப் பகுதிகளாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

---

## காங்கோ சம்பவங்கள்

### ஜனதிபதி நஸார் கவலை

கெய்ரோ, செப். 25

காங்கோ சம்பவங்கள் கவலையளிப்பதாக ஐக்கிய அரபுக் குடியரசு ஜனதிபதி நஸார் தெரிவித்துள்ளார்.

ஏகாதிபத்திய வாதிகள் கடாங்காவை காங்கோவுடன் இணைப்பதற்கு விடாமல் தடையாக இருக்கின்றனர் என்று அவர் குறிப்பிட்டார்.

திரு. ஹமர்ஷீல்டின் மரணத்துக்கும் ஏகாதிபத்திய வாதிகள் தான் காரணமென ஜனதிபதி நஸார் குற்றம் சாட்டினர்.

## அவசரகாலத்துக்கு அவசியமில்லை

### எம். ஈ. பி. தலைவர் கூறுகிருர்

ஹன்வெல்ல, திங்கள்

"நாட்டின் சகல பகுதிகளிலும் இப்பொழுது அமைதி நிலவுகிறது. இந் நிலையில் அவசரகால நிலையை நீடித்துக் கொண்டிருக்க வேண்டிய அவசியமே இல்லை" என்று எம். ஈ. பி. தலைவர் திரு. பிலிப் குணவர்த்தன கொஸ்கமையில் நடந்த எம். ஈ. பி. கூட்டமொன்றில் பேசுகையில் கூறினர்.

1960ம் ஆண்டு மார்ச் மாதத்தில் என் மீதும் எனது கட்சி மீதும் மக்கள் பெரும் மதிப்பு வைத்திருந்தார்கள். ஆனல் முதலாளிமார்களும் பத்திரிகைகளும் 'நான் மத விரோதி' என்றும் 'மதத்தை அழித்து விடுவேன்' என்றும் பிரசாரம் செய்து மக்களை எனக்கு எதிராக்கிவிட்டனர்" என்று திரு. பிலிப் குணவர்த்தன சொன்னர்.

அவசர காலத்தை நீடிப்பதன் மூலம் நாட்டை ஆட்சி செய்ய ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி நோக்கம் கொண்டுள்ளது என்று கூறிய திரு. பிலிப் குணவர்த்தன இந்த நிலை நீடிக்குமானல் சோஷலிஸ அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கு இளைஞர்கள் தங்களைத் தயார் செய்து கொள்ளவேண்டுமென்றுர்.

அவசர காலத்தை நீடிப்பதன் மூலம் ஆட்சி புரிய அரசாங்கம் நினைப்பதுவுமல்லாமல் பல் வேறு வரிகளையும் விதித்து மக்களை அரசாங்கம் கஷ்டப்படுத்துகிற தென்றும் வெற்றிலைக் கடைக்காரர் கூட லைசன்ஸ் எடுக்க வேண்டுமென்று அரசாங்கம் கேட்கும் போலிருக்கிறதென்றும் திரு. பிலிப் குணவர்த்தன கூறினர்.

கொட்டே எம். பி. திரு. ரொபர்ட் குணவர்த்தனவும் இக் கூட்டத்தில் பேசினர்.

## காங்கோவிலுள்ள இந்திய தூதர்

லியப்போல்ட்வில்லி, செப். 25

காங்கோவில் இந்திய தூதராகவிருக்கும் திரு. ரஹ்மான் நேற்று கடாங்காவுக்குச் சென்றுர். லியப்போட்வில்லியிலிருந்து எலிஸபெத்வில்லிக்குச் சென்றுள்ள அவர் அங்கு சில தினங்கள் தங்கிய பின் லியப்போல்ட்வில்லிக்குத் திரும்புவார்.

---

## மிகப் பெரும் அமெரிக்க ஏவு கருவி

வாஷிங்டன், செப். 24

அமெரிக்காவில் மிகப் பெரும் ஏவுகருவி ஒன்று நடவடிக்கைக்குத் தயாராய் இருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. 97 அடி உயரமான இக் கருவி பஸிபிக்கில் சோதனை செய்யப்பட்டது.

---

ஹவானு, செப். 25

கியூபா பிரதமர் பிடல் காஸ்ட்ரோவைக் கொலை செய்யும் திட்டத்துடன் கியூபாவுக்குள் பிரவேசித்தாக 12 பேர் நேற்று கைது செய்யப்பட்டனர். இவர்கள் அமெரிக்காவிலிருந்து சட்ட விரோதமாக கியூபாவுக்குள் பிரவேசித்தனராம்.

மணிவாக்கு

பொய் களைந்திடுவோம் - மெய்யைப் போற்றிடுவோம்.

—கவிமணி

# ஈழநாடு

EELA NADU

யாழ்ப்பாணம் பிலவ ஆண்டு புரட்டாசி மீ 10 உ (26-9-61)

EEL NADU: National Tamil Da y Post Box 49, Jaffna. Telegarms EELA NADU Jaffna Phone: 389.

## கலை வளர்ச்சிக்கு தடை வேண்டாம்

இசை, நடனம் முதலிய அரும் கலைகளைப் பயில தங்கள் சொந்தச் செலவில் சென்னை முதலிய இடங்களுக்கு இதுவரை பல மாணவ மாணவிகள் சென்று வந்தனர். ஆனல் இனி அவ்விதம் செல்ல முடியாமல் செலாவணிக்கட்டுப்பாடு காரணமாக அரசாங்கம் தடுத்து வருவதாயும், இதனல் இக்கலைகளிலே உயர்ந்த பயிற்சி பெற முடியாமல் மிகவும் சங்கடமா இருப்பதாகவும் ஓர் அன்பர் முறையிடுகிஞர். இன்னும் இதுபோல் பல மாணவ மாணவிகளும் சங்கடப்படக்கூடும்.

நாட்டின் செல்வம் வெளியேருமல் பாதுகாக்க வேண்டியதுதான். ஆனல் இதே சமயம் கல்வி கலை வளர்ச்சியை தடை செய்வதற்கான எவ்வித நடவடிக்கையும் எடுப்பது குறுகிய நோக்கமாவதுடன், நாட்டின் முன்னேற்றத்தையும் வளர்ச்சியையும் தடுப்பதுமாகும். கண்மூடித்தனமானதும், மனித உரிமைகளைப் பாதிப்பதுமான இவ்வித அற்ப புத்தி நடவடிக்கைகளால், மனக்கசப்புகள் வளருவதுடன், கள்ளமார்க்கெட் ஏற்படவும், பலமடங்கு பெருந்தொகையான பணம் வெளியேறவும் இடமளிக்கின்றது.

இன்னிசை, நடனம் முதலிய கலை வளர்ச்சிக்காகவும், கல்வி அறிவு பெறவும் நமக்கு அண்டையிலுள்ள ஒரே நாடான இந்தியாவுக்குச் செல்லுவதையும் தடுப்பதாயின், இலங்கை மக்கள் வெளி உலகத் தொடர்பின்றி, பல விஷயங்களிலும் பின் தங்கியவராய் விடுவர். இலங்கையும் இந்தியாவும் குறுகிய கடலால் பிரிக்கப்பட்டிருப்பினும், இரண்டுக்கும் கலாச்சாரம், சமயம், சரித்திரம், பொருளாதாரம் முதலிய பலவிதங்களிலும் நீடித்த உறவுகளும் பிணைப்புமுண்டு. இரண்டின் உடல்களும் வேருயினும் உள்ளமும் உயிரும் ஒன்றே. தெய்வத்தால் நெருங்கிப் பிணைக்கப்பட்ட இருநாடுகளையும் மனிதனல் பிரிக்க முடியாதென்றுர் முன்னர் இங்கு விஜயம் செய்திருந்த தமிழ்நாட்டுத் தலைவர் திரு. எஸ். சத்தியமூர்த்தி. சிறிய நாடான இலங்கையின் அபிவிருத்தி, பாரத நாட்டின் நட்பிலும் நல்லுறவிலும்தான் தங்கியுள்ளது. இதை இப்போதுள்ள இலங்கை அரசாங்கம் நன்குணர்ந்து அவ்வித அடிப்படை கொள்கை கொண்டுள்ளது வரவேற்கத்தக்கதே. ஆனல் இருதேச மக்களும தாராளமாக யாத்திரை செய்யவும், கல்வி, கலாசார உறவுகளை [illegible]ளர்த்துக் கொள்ளவும் [illegible] விதிப்பது, இவ்வுறவு [illegible] பலவீனப்படுத்தி தப் [illegible]ணங்களும் மனக்கசப்பும் வளர இடமேற்படுத்துவதாகவே முடியும்.

இலங்கையில் சுயதேவைப் பூர்த்தித் திட்டங்களை அபிவிருத்தி செய்[illegible] ஏற்றுமதியைக் குறைத்[illegible] நமது செல்வம் வெளி[illegible]வதைக் கூடுமானவரை [illegible]லாம். இங்கி இசை, நட[illegible] கல்லூரியை அமைத்து, [illegible]க நாட்டிலிருந்து புகழ்பெற்ற கலைஞர்களை வரவழைத்து போதிக்க ஒழுங்கு செய்வதும் நல்லதே. அவ்வித ஏற்பாடு எதுவும் செய்யாமல், கேவலம் செலாவணியை பாதுகாப்பதாகச் சொல்லி தங்கள் சொந்தச் சேலவில் செல்லுபவர்களையும் தடுப்பது மனிதரின் அடிப்படை உரிமைகளையும் பறிப்பதாவதுடன் எவ்வகையிலும் இது சரியாகாது. இதைப் பற்றி அரசாங்கம் புனராலோசனை செய்து, சட்ட கெடுபிடிகளைக் கூடிய சீக்கிரத்தில் தளர்த்த வேண்டும்.

# ‘ஆற்றலும் திறமையும் வாய்ந்த திரு. பண்டாரநாயக்கா’

—திரு. நடேசபிள்ளை

**இன்று பண்டாரநாயக்காவின் நினைவுநாள். அன்னாரின் நினைவு குறித்துத் தபால், ஒலி பரப்புப் பகுதி முன்னுள் மந்திரி திரு. எஸ். நடேசபிள்ளை இலங்கை வானொலியில் ஆற்றிய சொற்பொழிவு இங்கு வெளியாகியுள்ளது.**

ஓர் அரசியல்வாதி என்ற மட்டில் திரு. பண்டாரநாயக்காவின் மாண்பும் பெருமையும் தங்கியிருக்கவில்லை. அவர் பண்புமிக்கவராகவும் சிறந்த புத்திசாலியாகவும் விளங்கினர். அவரிடம் மற்றவர்களிடமில்லாத ஆற்றலும் திறமைகளும் இணைந்திருந்தன. அவருடைய பிரிவால் இலங்கை நாவன்மை படைத்த ஒரு மேதாவியை இழந்துவிட்டது. அவருடைய சொற்பொழிவுகள் மக்களின் உள்ளங்களில் என்றென்றும் நிலைத்து நிற்கும்.

இலங்கை தனக்கு கிடைத்த அரிய புதல்வரை இழந்து இருவருடங்கள் ஓடி மறைந்து விட்டன. அரசியல் வாழ்வில் அதி உன்னத நிலையை அவர் எய்திவரும் காலத்தில் துக்ககரமான இச்சம்பவம் நடைபெற்றது. இது இந்த நாட்டின் துர் அதிருஷ்டமேயாகும்.

இலங்கைச் சரித்திரத்தில் திரு. பண்டாரநாயக்கா தமக்கென ஒரு நிரந்தர இடத்தை வகுத்துள்ளார். மக்கள் யுகம் மலர்ந்த காலத்தில் அவர் பிரதமரானுர். எனவே அன்னாரின் நினைவு என்றுமே மக்கள் உள்ளங்களில் பசுமையாக இருக்கும். ‘நாம் இருக்கும் நாடு நமதே’ என்ற எண்ணமும் அவருடைய காலத்தில் தான் மக்களிடையே வேரூன்ற ஆரம்பித்தது

திரு. பண்டாரநாயக்கா தமது அரசியல் வாழ்வை ஆரம்பிக்கத் தொடங்கிய காலத்திலேயே சோஷலிச அடிப்படையில் அரசியலை அமைக்க ஆர்வம் கொண்டிருந்தார்.

அவரது சோஷலிசக் கொள்கையையும் வெளிநாட்டுக் கொள்கையையும் இந்தியப் பத்திரிகைகள் எல்லாம் பெரிதும் பாராட்டின. இக்கொள்கைகள் இலங்கை — இந்தியத் தொடர்பை வலுப்படுத்த வழியமைத்தன. இருதேசங்களுக்குமிடையில் ஏற்பட்டுள்ள இந்த நல்லுறவும் நல்லெண்ணமும் இலங்கையிலுள்ள நாடற்றவர் பிரச்சினை விரைவில் திருப்திகரமான முறையில் தீர்க்கப்படுவதற்கு உதவியாக இருக்குமென நம்பலாம்.

பாரதநாட்டின் பொருளாதார விருத்திக்கும் முன்னேற்றத்துக்கும் கிராமங்களே பெரிதும் உதவியளிக்கின்றன என்பது மகாத்மா காந்தியின் அசைக்க முடியாத நம்பிக்கையாகும்.

திரு. பண்டாரநாயக்காவும் இதேவித நம்பிக்கை கொண்டிருந்தார்.

அவர் உள்ளூர் ஆட்சி ஸ்தாபனங்களின் பிரதிநிதிகளுடனும் அங்கத்தவர்களுடனும் நல்ல தொடர்பு கொண்டிருந்தார். அவர் இந்த ஸ்தாபனங்களுக்கு அதிக அதிகாரம் வழங்கவேண்டுமெனவும் அவர் விரும்பினர். பிரதேச சபைகள் ஏற்படுத்த வேண்டுமென்ற டொனமூர் அரசியல் சிபார்சை அவர் ஆதரித்தார்.

பௌத்த மதத்தில் திரு. பண்டாரநாயக்கா மிகுந்த நம்பிக்கை பூண்டிருந்தார். அவர் அதைத் தமது சமய மெனப் பேணி வளர்த்தார். 2,000 வருடங்களுக்கு மேல் இங்குநிலவிவரும்பௌத்தமதத்துக்கு முக்கிய இடமளிக்க வேண்டுமென பெரிதும் விரும்பினர்.

இந்த நாட்டில் தமிழ் மக்களின் கலையையும் கலாச்சாரத்தையும் பாதுகாத்து வளர்க்க வேண்டுமென்ற கோரிக்கையை அவர் உணர்ந்து வித்யோதய பல்கலைக்கழகத் திறப்பு விழாவின்போது இது பற்றி அவர் பகிரங்கமாக எடுத்துரைத்தார்.

சேர் பொன்னம்பலம் இராமநாதனல் நிறுவப்பெற்ற கல்வி ஸ்தாபனம் தமிழினத்தின் நன்மைக்காக கலாச்சார பல்கலைக்கழகமாக மாற்றப்பட வேண்டுமென நான் அவரிடம் கோரியபோது அவர் உடனே அதற்குத் தமது சம்மதத்தைத் தெரிவித்தார். இதனை நான் மிகுந்த நன்றியறிதலுடன் இங்கு தெரிவிக்க விரும்புகின்றேன்.

அவர் அன்று எனக்கு மனப்பூர்வமாக அளித்த வாக்குறுதியை அவரது அன்பு மனைவியும் பிரதமருமாகிய திருமதி பண்டாரநாயக்கா அமுலாக்க தீர்மானித்துள்ளார்.

## இன்று கவிமணி தேசிகவினாயகம் பிள்ளை அவர்களின் நினைவுதினம்

# கவிமணியின் கவிதைகள்

—கு. கு.—

‘தெய்வகீதம் பலவுண்டு
தெரிந்துபாட நீயுண்டு’

கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளையின் கவிதைகளில் தெய்வத்தன்மை வாய்ந்த கவிதைகள் பலவுள. அதைத் தெரிந்து பாடத்தான் நமக்கு ஆற்றல் வேண்டும். அந்த வல்லமை பெற்று அதைச் சுவைத்தவர்கள் இப்படித்தான் கூறுவார்கள்:

‘தேசிக விநாயகத்தின்
கவிப்பெருமை
தினமும் கேட்பது என்
செவிப்பெருமை’

நாமக்கல் கவிஞருக்கு அந்தக் கவிதைகளின் பெருமை தெரிந்திருக்கலாம். ஆனல் நமக்கு?...

கவிமணியின் கவிதைகள் இனிமையானவை. கவிதையில் கனிவு, எளிமை இருக்க வேண்டும் என்று கவிதை மூலம் கவிமணியும் எடுத்துக் காட்டியிருக்கின்றுர். கரடுமுரடான கல்லை யெடுத்து சிற்றுளி கொண்டு சிறந்த அழகுச் சிலையாக்குகின்றுனே சிற்பி. இது போன்றுதான் கவிமணியும். கரடுமுரடான விஷயங்களையெல்லாம் தமது அறிவு என்னும் உழியால் அதை அருமையான கவிதையாக்கிவிடுகின்றுர்.

தாயின் மடியிற் கிடக்கிறது குழந்தை. அதன் மழலைப்பேச்சைக் கேட்கத் துடிக்கிறது தாயின் உள்ளம். கைகளைப் பிடிக்கின்றுள், ‘ஒரு கேள்வி கேட்கிறேன் சொல்கிருயா?’ ‘ம்’ என்கிறது குழந்தை. கேள்வி கேட்கிருள் தாய். விடை பகர்கிறது குழந்தை.

‘இன்பச்சிறுகரங்கள்
இவைதாம் உனக்கு
எவ்வாறமைந்தன?
என்குழந்தாய்!
அன்பு வளர்ந்திவ்வுருவாகி-
என்னை
அண்டி அணைந்திருக்குதம்மா!’

தாயின் மடியில் கிடக்கும் தளிர்க்குழந்தை கூறியதாக கவி கற்பனை செய்து குழந்தை கூடப் பாடும் கவிதையாக்கி விட்டார் கவிஞர்.

குழந்தை வளர்ந்துவிட்டது. அன்புமடியில் கிடந்த குழந்தை தரையில் நடக்கத் தொடங்குகிறது. இரவு பகல் இப்படிப் பல மாருட்டத்தை அக்தக் குழந்தை உணர்கிறது. வருவதும் போவதும் இப்படி சூதாட்டம் பல. இது யார்வேலை? இதைச் செய்யும் சூத்திரதாரி யார்? வளர்ந்துவிட்ட மனிதனின் கேள்விக்கு சிறிது நகைப்புடன் பதில்கூறுகிருர் கவிமணி.

‘எல்லாம் இங்கோர் சூதாட்டம்
இரவும் பகலும் மாருட்டம்
வல்லான் விதியே ஆடுமகன்;
வலியில்மனிதர் கருவிகளாம்’

நம்மையெல்லாம் ஆட்டுவிக்கும் ஒரு வல்லவன் விதியென்னும் கயிறுகொண்டு நம்மை ஆட்டுவிக்கின்றுன். அவன் முன்னிலையில் நாம் எல்லாம் வலியிழந்தவர்கள் என்பதை இலேசாக வற்புறுத்துகிருர் தேசிய விநாயகம்பிள்ளை.

வளர்ந்துவிட்ட மனிதன் அன்பை மறந்துவிடுகிருன். போட்டி, பொருமை, அதிகாரம், அகங்காரம், நாசவேலை இவற்றில் அவனது மனம் செல்கிறது. கவிமணி கலங்குகின்றுர். புன்நெறியிற் சென்று நாசம் விளைவிக்காதீர்கள். நன்நெறியிற் செல்லுங்கள் என அறிவுறுத்துவதுபோ[illegible]

‘நாச அணுக்குண்டால் நமக்கு
நன்மை ஏற்படுமோ?
நேசமாய் நிதமும் அஹிம்சை
நெறியைப் போற்றுவமே’

என்று அறிவுரை பகர்கிருர் கவிஞர், நேசம் இல்லாத இடத்து நாசம் வளருகின்றது. எவ்வளவு தெளிவாகஎடுத்துரைக்கிருர்

இந்த நாசவேலைகளை விட்டு விடுமாறு மக்களைக் கேட்பதோடு கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை நிற்கவில்லை. நாடு நலம்பெற, நாட்டுமக்கள் மகிழ்வோடு செழிப்போடு வாழ காந்திமதி தேவியை வேண்டுமென்கின்றுர் கவிமணி.

‘பாலைவனம் சோலைவனமாக
வேண்டும்
பசுங்கிளிகள் அங்கிருந்து
பாடவேண்டும்
சாலைகளில் பலதொழிலும்
பெருகவேண்டும்
சபைகளிலே தமிழெழுந்து
முழங்கவேண்டும்
சீலஉடை-கதருடையாய்த்
திகழவேண்டும்
தேசபக்தி செழித்தோங்கி
வளரவேண்டும்
வேலையில்லாத் திண்டாட்டம்
ஒழியவேண்டும்
வெற்றியின்மேல்வெற்றி
எமக்கெய்தவேண்டும்.

## ஜயாறன் எழுதுவது

950 பக்கங்கள் கொண்ட ஒரு பெரிய புத்தகம் நேற்று தபாலில் கிடைத்தது. “புதிய சகாப்தத்தை நோக்கி” (டுவர்ட்ஸ் எ நியூ ஈரா) என்பது அந்த நூலின் பெயர். காலஞ்சென்ற பிரதமர் பண்டாரநாயக்கா 1931-ம் வருஷம் முதல் 1959-ம் வருடம்வரை இலங்கை சட்டசபைகளில் செய்த பிரசங்கங்களிலிருந்து, முக்கியமான சிலவற்றைத் தொகுத்து உயர்ந்த முறையிலே பிரசுரம் செய்திருக்கிருர்கள்.

பண்டாரநாயக்காவின் இரண்டாவது ஆண்டு ஞாபகமாக அந்நூல் வெளியிடப்பட்டுள்ளது. அவருக்குப் பொருத்தமானதும் மேலானதுமான ஞாபகசின்னமாகும்.

* * *

கோவலன் கொலை செய்யப்பட்டபின் அவனது மனைவி கண்ணகி பழி தீர்த்துக் கொள்ள, மதுரை நகரை எரித்தாள். ஆனல் பண்டாரநாயக்காவின் மனைவியான சிறிமா, தன் புருஷன் மாண்டபின், அரசியலில் குதித்து, புருஷனின் அரசியல் எதிரிகளைத் தேர்தலில் வென்று பிரதம மந்திரியாகி, தன் புருஷன் கடைப்பிடித்த கொள்கைகளையும் நோக்கங்களையும் நிறைவேற்றப் போவதாக அறிவிக்கின்றுர். தன் புருஷனுக்காக ஹொரகொல்லையிலே மேலான ஞாபகச் சின்னம் அமைத்து, இரண்டாவது ஞாபக தினத்தை ஒரு தேசியத் திருநாளாகக் கொண்டாடுகின்றுர். இதை எல்லாம் பார்க்க, பண்டாரநாயக்காவின் ஆத்மாவுக்கு எவ்வளவு திருப்தியும் ஆனந்தமுமாக இருக்கும்.

* * *

பிரதமர் சிறிமாவை, தர்ம பத்தினி என்று பாராட்டிய இந்திய உபஜனதிபதியான டாக்டர் ராதாக்கிருஷ்ணன் தான் இந்தப் புத்தகத்துக்கு அணிந்துரையும் எழுதியுள்ளார்.

“இலங்கை சித்தடக்கமான அழகிய ஒரு நாடு. இயற்கைச் செல்வங்கள் நிறைந்தன. கலை ஆர்வம் மிக்க மக்கள். பரஸ்பர அபிமானமும் ஒத்துழைப்பும் இருப்பின், இது சுபிட்சமான தேசமாகி, அதன் மக்களும் பூரண வாழ்வு வாழ முடியும். இலங்கை மக்கள் பின்பற்றும் பல மதங்களும், மனச்சுத்தம், தியாகம் முதலியவற்றை வற்புறுத்துகின்றன. இக்கொள்கைப்படி நடந்தால் இலங்கையின் எதிர்காலம் மகோன்னதமாக இருக்கும் காலஞ்சென்ற பிரதமர் பண்டாரநாயக்கா தன் வாழ்க்கையில் பின்பற்றிய உயரிய கொள்கைகள் இப்போதைய தலைமுறைக்கு உற்சாகமூட்டுமென்றே நம்புகிறேன்” என்று அதில் குறிப்பிட்டிருக்கின்றுர்.

* * *

சிங்களம், தமிழ் இரண்டும் இலங்கையின் அரசாங்க மொழிகளாக வேண்டுமென்ற பிரேரணையை அரசாங்கசபையில் ஆதரித்து அவர் பேசியிருப்பதைப் படித்தேன். பின்னர் அவரே இக்கருத்தைமாற்றிக்கொண்டிருக்கிருர். இவ்விஷயத்தில் அவர் உறுதியான ஒரு கொள்கையைக் கடைப்பிடிக்கவில்லை.

அவர் கொல்லப்படுவதற்கு 3 நாட்களுக்கு முன்பாக அதாவது 1959-ம் வருடம் செப்டம்பர் மாதம் 22-ந் திகதி தமிழரசுக் கட்சியின் ஸ்தாபகரில் ஒருவரும், கோப்பாய் பிரதிநிதியுமான திரு. ஸி. வன்னியசிங்கத்தின் மரணத்துக்காக வருந்தி, பார்லிமெண்டில் அவர் பேசியவை, இப்புத்தகத்தில் கடைசிப் பேச்சாக வெளியிடப்பெற்றுள்ளது. அவரது தகனக்கிரியைக்கு நேரில் செல்ல முடியாததற்கு நான் வருந்துகிறேன். ஆனல் ஆகாயப்படையைச் சேர்ந்த ஒரு விமானத்தில், செனட்சபை

(5ம் பக்கம் பார்க்க)

# 'அகப்புரட்சியேவாழ்வளிக்கும் போதனையால் பயனில்லை'

—லெஸ்லி

பேராதனை, திங்கள்

"உபதேச மொழிகளைக் கேட்டுவிட்டு மக்கள் கஷ்டப்பட்டு உழைக்கப்போவதில்லை. நாட்டின் பொது நலத்துக்காக நாம் கஷ்டப்பட்டு உழைக்க வேண்டும் என்ற அகப் புரட்சியே மக்களிடை ஏற்படல் வேண்டும். புதிய சமுதாய அமைப்பு முதலாளிகளுக்கன்றி தொழிலாளிகளுக்கே நன்மை பயக்கும் என்பதையும், தொழிலாளர் வாழ்க்கைத் தரமே உயர்த்தப்படும் என்பதையும் தொழிலாளர்களுக்கு உணர வைத்தல் வேண்டும்."

இவ்வாறு பாணந்துறை எம்.பி. திரு. லெஸ்லி குணவர்த்தன பேராதனைப் பல்கலைக் கழக மாணவர் பொருளாதார சங்கக் கூட்டமொன்றில் பேசுகையில் கூறினர். அவர் மேலும் கூறியதாவது:

"நாட்டின் பொருளாதாரத்தை அதிகரிப்பதே இன்று முக்கியமாகச் செய்யவேண்டிய கடமையாகும். எந்தக் கட்சி அரசாங்க பதவியிலிருந்தாலும் இவ்விஷயத்தில் கவனம் செலுத்த வேண்டும். பொருளாதாரத்தை அதிகரிக்கும் முறை பற்றிக் கட்சிகளிடையே அபிப்பிராய பேதம் காணப்பட்டாலும், பொருளாதாரம் அதிகரிக்கப்படவேண்டியது முக்கிய அம்சம் என்பதை எல்லாக் கட்சிகளும் ஒப்புக்கொள்ளும்.

எல். எஸ். எஸ். பி. எப்பொழுதும் ஒரே மாதிரியான பொருளாதார அபிவிருத்திக் கொள்கையையே வலியுறுத்தி வந்துள்ளது. மக்கள் அனைவரும் சம்பந்தப்பட்ட அபிவிருத்தித் திட்டமொன்றையே எல். எஸ். எஸ். பி. வலியுறுத்தி வந்துள்ளது. பெரிய தோட்டங்களைத் தேசிய மயமாக்குவது எல். எஸ். எஸ். பியின் பொருளாதாரக் கொள்கையின் முதற் குறிக்கோளாகும். அடுத்தபடியாக ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகம் தேசிய மயமாக்கப்படல் வேண்டும். கருவாட்டு வியாபாரம் தேசியமயமாக்கப்பட்ட பின்னர் கருவாட்டு விலை ரூபா 1-20 சதத்திலிருந்து 72 சதமாகக் குறைந்துவிட்டது.

'தேசிய மயம்' என்னும் பதத்தின் அர்த்தத்தைப் பிழையாக விளங்கிக்கொள்ளவேண்டாம். தேசிய மயமாக்கப்பட்ட தொழில்களின் நிர்வாகங்களையும் தொழிலாளர் ஏற்றுக் கொள்வதையே எல்.எஸ்.எஸ்.பி. தேசிய மயம் எனக் கருதுகிறது. யூகோஸ்லவியா தேசத்தில் தொழிலாளர்களே நிர்வாகத்தையும் செய்து வருவதால் யூகோஸ்லவியாவில் உற்பத்தி அதிகரித்துள்ளது. ரஷ்யா தேசமொன்றுக்கே யூகோஸ்லவியாப் பொருள் உற்பத்தி விதம் இரண்டாம் படியாகவிருக்கிறது. சமத்துவம் வெற்றிகரமாக நிலைக்க வேண்டுமென்ருல் பொருளாதார அபிவிருத்தியில் மக்கள் அனைவரும் ஒற்றுமையுடன் ஈடுபடல் வேண்டும். சமத்துவத்தை பலவந்தமாக நிலைநாட்ட முடியாது. அது மக்களிடையே இருந்து எழவேண்டும்."

## கல்வி இலாகா புதிய திட்டம்

### அக்டோபர் 1-ல் அமுலுக்கு வரும்

கொழும்பு, திங்கள்

கல்வி இலாகா விரிவுபடுத்தப்படும் திட்டம் அக்டோ மாதம் முதலாம் திகதியன்று அமுலுக்குக் கொண்டுவரப்படும். திட்டத்தை அமுல் செய்வதற்கு உதவியாகவிருப்பதற்கென வித்தியாதிபதி திரு. எஸ். எப். டி' சில்வா விளக்கப் புத்தகத்தை சகல கல்வி அதிபர்களுக்கும் அனுப்பிவைத்துள்ளார். பிரிவுபடுத்தும் திட்டம் இதன் உதவியுடன் இலகுவாகவும் திருப்திகரமாகவும் செயல் முறைக்குக் கொண்டுவரப்படும்என எதிர்பார்க்கப்படுகிறது.

மேற்படி புத்தகம் நிருவாகம், கணக்குப்பகுதி, கல்வி மேற்பார்வை என மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின் கீழ், 21 மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு மாவட்டத்துக்கும் ஒவ்வொரு உதவி வித்தியாதிபதி தலைமையாகக் கடமையாற்றுவார். காலக்கிரமத்தில் வித்தியாதிபதியும் ஐந்து உதவியாளர்களும் ஒரு சில குமாஸ்தாக்கள் மட்டும் தலைமைக் காரியாலயத்தில் கடமையாற்ற நேரிடும். இம் மாற்றங்கள் படிப்படியாகவே செய்யப்பட்டுவரும் எனக் கல்விப்பகுதி வட்டாரங்கள் கூறுகின்றன. 55 வயதுக்கு மேற்பட்டோர் கட்டாய இளைப்பாறும் பிரேரணை ரத்துச் செய்யப்பட்டுள்ளதால் உயர் பதவிகள், புதிய நியமனங்கள் செய்வதற்கான நடவடிக்கைகள் எதையும் கல்வி இலாகா மேற்கொள்ள மாட்டாது.

## பெண்ணைக் கெடுக்க எத்தனித்தார்

யாழ்ப்பாணம், செவ்வாய்

கோப்பாய் வடக்கைச் சேர்ந்த சின்னத்துரை பாக்கியம் என்பவரது வீட்டுக்குள் அத்துமீறிப் பிரவேசித்து அவரைக் கெடுக்க முயன்றதாக அதேயூரைச் சேர்ந்த எஸ். கந்தசாமி என்பவர்மீது கோப்பாய் பொலிஸ் சப்-இன்ஸ்பெக்டர் திரு. ஆர் தேவசகாயத்தினுல் தொடரப்பட்ட வழக்கு யாழ்ப்பாணம் மாஜிஸ்ரேட் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

எதிரி குற்றத்தை ஒப்புக்கொள்ளவே மாஜிஸ்ரேட் திரு. அரசு வால்டன் 150 ரூபாய் பிணையில் ஒருவருட நன்நடத்தையில் செல்லுமாறும் முடிக்குரிய செலவாக ரூ. 40 செலுத்துமாறும் உத்தரவிட்டார்.

## ஐயாறன்

(4ம் பக்கத்தொடர்ச்சி)

முதல்வர், ஒரு மந்திரி, கலாச்சாரமந்திரி, எதிர்க்கட்சித் தலைவர் இவர்கள் அங்கு செல்ல விசேஷ ஒழுங்கு செய்திருக்கிறேன். அரசாங்கத்தின் ஆழ்ந்த அனுதாபத்தை அவரது குடும்பத்தாருக்குத் தெரிவிக்க ஒழுங்கு செய்யும்படி தலைவரைக் கேட்டுக்கொள்ளுகிறேன்."

வன்னியசிங்கத்தாருக்கு இவ்விதம் அனுதாபம் தெரிவித்த 3 நாளில், தாமும் அதே இடம் சேரப் போவது அவருக்குச் சொப்பனத்திலும் தெரியுமா? நாடகமே உலகம். நாளை நடப்பதை யாரறிவார்.

* * *

இந்தப் புத்தகத்தின் விலை பத்து ரூபாய். பல நூறு கொப்பிகள் இதற்குள் விற்பனையாகியுள்ளதாம்.

இப்போதுள்ள சிறிமாவின் அரசாங்கம் பண்டாரநாயக்காவின் கொள்கைகளையே பின்பற்றப் போவதாகக் கூறுகிறது. அக்கொள்கைகளையும் பண்டாரநாயக்காவின் அறிவாற்றல்களையும் அறிந்துகொள்ள அந்தப் புத்தகம் பெரிதும் பயன்படுவதாகும்.

## காலஞ்சென்ற பிரதமருக்கு அஞ்சலி

கொழும்பு, திங்கள்

சென்ற வார முடிவில் பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவும் குடும்பத்தினரும் ஹொரகொல்லைக்குச்சென்றதிலிருந்து மக்களது ஹொரகொல்லைப் பிரயாணம் ஆரம்பமாகியுள்ளது. செவ்வாயன்று ஹொரகல்லையில் நடைபெறவிருக்கும் பண்டாரநாயக்கா ஞாபகதின விழாவின்போது சேவைசெய்வதற்கென ஆண், பெண் சாரணக்குழுவினர் அங்கு சேர்ந்துள்ளனர். பிரதமர் இறந்த நேரமாகிய காலை 7-55க்கு 2 நிமிஷ நேர மௌனத்தை அனுட்டிப்பதோடு நாளைய நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும். இதே வேளையில் காலஞ்சென்ற பிரதமர் திரு. பண்டாரநாயக்காவின் நெருங்கிய உறவினர் எல்லோரும் ஹொரகொல்லையில் அவரது சமாதிக்கு அஞ்சலி செலுத்துவர். நாளைப் பிற்பகல் 3 மணிக்கு அங்கு மகா தேசாதிபதி சேர் ஒலிவர் குணதிலகா தலைமையில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெறும். இக் கூட்டத்தில் அத்தனகலை வாசி ஒருவரும் சொற்பொழிவாற்றுவார். ஹொரகொல்லைக்குச் செல்வோரது பிரயாணவசதி, உணவு வசதி, சுகாதார வசதி யாவும் உரிய இலாகாத் தலைவர்களது மேற்பார்வையில் மிகச் சிரத்தையோடு கவனிக்கப்படுகின்றன.

வெலிக்கடைச் சிறையிலுள்ள கைதிகள் சிறைச்சாலை அதிகாரியின் உத்தரவோடு நாளைய தங்கள் நண்பகல் உணவைத் தானமாகக் கொடுத்துக் காலஞ்சென்ற பிரதமருக்குத் தங்கள் அஞ்சலியைச் செலுத்துவார்கள்.

லண்டன் புத்த விகாரையிலும் நாளை விசேஷ தானம் நடைபெறும்.

## காதல் முறிவால் தற்கொலை

ஹொறணை, திங்கள்

"இளைஞர்களும் யுவதிகளும் தமது காதல் தோல்வியுறுவதாலோ, தடை ஏற்படுவதாலோ தற்கொலை செய்துகொள்வது பரிதாபகரமானதுமன்றி பெரும் பிரச்சினையாகவும் இருக்கிறது."

இவ்வாறு தற்கொலைகள் சம்பந்தமாக விசாரணை நடத்திய திரு. டி. என். வன்னிஆராய்ச்சி தெரிவித்தார்.

மாயழகு என்னும் யுவதி தான்காதலித்த டி. ஆர். செல்வதுரை என்ற இளைஞனைக் கல்யாணம் செய்ய அவரது தாயும் பாட்டியும் சம்மதிக்காததால் தற்கொலை செய்துகொண்டார்.

இந்த மரணம் சம்பந்தமாக விசாரணை நடத்திய போதே திரு. வன்னிஆராய்ச்சி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

## பூதவுடல் வியாழன் வந்துசேரும்

ஸ்டாக்ஹோம், செப். 25

விமான விபத்தில் உயிரிந்த ஐ. நா. பொதுக் காரியதரிசி திரு. டாக் ஹமர்ஷீல்டின் பூதவுடல் வியாழக்கிழமை நண்பகல் ஸ்டாக்ஹோம் வந்து சேருமென எதிர்பார்க்கப்படுகிறது. திட்டமிட்டபடி வெள்ளிக்கிழமை அவரது பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

## காலராவுக்கு 5000 பேர் பலி

பாட்னு, செப். 25

சென்ற நான்கு மாதங்களில் பிகார் ராஜ்யத்தில் காலரா நோய்க்கு சுமார் ஐயாயிரம் மக்கள் பலியானதாக அறிவிக்கப்படுகிறது.

காயா ஜில்லாவில் 1,600பேர்களும், பாட்னுவில் 1,400 பேர்களும் காலராவினுல் மாண்டனர்.

# 'ஒற்றுமையை வளர்க்க அரசினர் முயல வேண்டும்'

## மட்டக்களப்பில் திரு. வில்மட் பெரேரா

மட்டக்களப்பு, திங்கள்

இலங்கையின் பெரும் பிரிவினரிடையே நிலவும் வேற்றுமைகளைத் தீர்க்கும் வரை இந்நாட்டின் வளமும் முன்னேற்றமும் மிகவும் பாதிக்கப்படும் என மட்டக்களப்பு மெதடிஸ்த மத்தியகல்லூரி வருடாந்த விருந்துபசாரத்தில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட திரு. வில்மட் பெரேரா குறிப்பிட்டார். அவர் மேலும் பேசியதாவது:-

கீழான உணர்ச்சிகளை விலக்கி எல்லோரும் ஒன்று சேர்ந்து இலங்கையில் ஒற்றுமை நிலவச் செய்யும் காலம் வந்துவிட்டது. அரசாங்கம் சட்டங்களை திருத்துவதையும் நீக்குவதையும்விட உண்மையிலேயே நல்ல அபிப்பிராயம் கொண்டுள்ளதென்பதைச் செயல் முறையில் காட்டுவதையே தமிழ் மக்கள் பெரிதும் விரும்புகின்றனர். இதனை எனது நண்பர்கள் சிலர் மூலம் நான் அறிந்துகொண்டேன். இரு பகுதியினருக்கும் சாதகமான வகையில் இந்தப் பிரச்னைக்கு ஒரு சுமுகமான முடிவு காண வேண்டும். இதற்கான நடவடிக்கையை அரசாங்கமே முதலில் ஆரம்பிக்க வேண்டும். காலஞ்சென்ற பிரதமர் திரு. பண்டாரநாயாக்காவின் ஞாபகதினக் கொண்டாட்டத்தின் போது இவ்வித நடவடிக்கைகள் எடுப்பதற்கு இது ஒரு தகுந்த சந்தர்ப்பமாகும்.

"காலஞ்சென்ற திரு. பண்டாரநாயக்கா, சிஸரோ, பிளாடோ, அரிஸ்டோடல் போன்ற அறிஞர்களை எல்லாம் நன்கு கற்றறிந்தவர். தாராள மனப்பான்மையுடையவர். இன்று அவர் உயிருடனிருந்தால் நாடு இந்த நிலையை அடைய விட்டிருக்கவே மாட்டார். 1956-ம் ஆண்டு பொதுத் தேர்தலுக்கு என்னையும் போட்டியிடுமாறு திரு. பண்டாரநாயக்கா என்னைக் கேட்டபோது, அவரது மொழிக் கொள்கைக்கு நான் இணங்க முடியாதென்று கூறி மறுத்துவிட்டேன். திரு பண்டாரநாயக்காவை அறிந்தவர்களும் அவரது பெயரால் இன்று சேவை செய்பவர்களும் அவரது கொள்கைகளை நடைமுறையில் கொண்டுவர முயலவேண்டும்.

"நாங்கள் உண்மையுள்ளவர்களாக நடந்துகொள்ள வேண்டும். ஒருவர் இன்னொருவரது மதத்தையோ, இனத்தையோ, மொழியையோ தாழ்த்த முடியாது என்பது எனது நம்பிக்கை. எங்களுடைய நாடு மற்றைய நாடுகளோடு நெருங்கிய தொடர்புடையது. என்னைப் பிறர் ஒரு புரட்சிவாதியாகக் கருதியபோதிலும், பாடசாலைகளில் ஆங்கிலம் கட்டாயமாக இரண்டாவது மொழியாகக் கற்பிக்கப்படல் வேண்டும் என வற்புறுத்துகிறேன். ஆங்கிலம் இப்போது ஆளுபவர்கள் மொழியல்ல. அது இன்று உலகமொழி. சென்னை பல்கலைக்கழகத்தில் ஆங்கிலத்திலேயே இன்னும் கல்வி போதிக்கப்படுகின்றது. சிங்களம் மட்டும் சட்டத்தை எது விதத்திலும் பாதிக்காத வகையில் ஆங்கிலத்தையும் தமிழையும் கூட்டு மொழியாக்குவதன்மூலம் இந்தப் பிரச்சினைக்கு ஒரு வழி காணமுடியும் என்பதே எனது கருத்து இதை நான் எத்தனையோ தடவைகளில் வற்புறுத்தியுள்ளேன்."

## பவுண் விலை ஏறுகிறது

கொழும்பு, திங்கள்

பவுணின் விலை வாரத்துக்கு வாரம் உயர்ந்து கொண்டு போகிறது. சில வாரங்களுக்கு முன்னர் 90 ரூபாய் விளைவு தங்கப்பவுண் ஒன்றின் விலை. சென்ற சனியன்று இங்கு, 107 ரூபாயாக இருந்தது. இதே அளவு தங்கப்பவுணின் உலக சந்தையில் 45 ரூபாய்க்கும் உலக சந்தையில் விலைப்படுவதிலும் இரண்டு மடங்கு அதிகமான விலையில் இங்கு பவுண் விலையாகிறது. நாணய அச்சிடப்பட்ட தங்கப்பவுண் பல வருடங்களாக இறக்குமதி செய்யப்படுவதில்லை, சாதாரண தங்கத்தை இலங்கை மத்திய வங்கியால் இறக்குமதிசெய்கிறது. குடிசைக்கைத்தொழில் கிராம அபிவிருத்தி இலாகாவின் அனுமதிச் சீட்டுடன் பொற் கொல்லருக்கு மத்திய வங்கி இதை விற்பனை செய்து இறக்குமதி செய்யப்படுகின்றது. குடிசைக் கைத்தொழில் கிராம அபிவிருத்தி இலாகாவின் 'பர்மிட்' டுடன், பொற் கொல்லர்கள் மத்திய வங்கியிடமிருந்து பவுண் வாங்கி வருகிருர்கள்.

நாணய அச்சடிக்கப்பட்ட தங்கப்பவுண் கள்ளக் கடத்தல் செய்பவர்களாலேயே இலங்கைக்குக் கொண்டுவரப்படுகிறது. சுங்க அதிகாரிகள் அவற்றைக் கைப்பற்றி விற்பனை செய்யும் போது உள்நாட்டுத் தங்க வியாபாரிகள் அவற்றை வாங்கிப், பொது மக்களிடம் விற்பனை செய்கிருர்கள்.

நாணய அச்சிடப்பட்ட தங்கம் இறக்குமதியில்லாமல் போனதாலேயே அதன் விலை இங்கு அதிகரித்துள்ளது. சாதாரண தங்கத்தின் விலை உயர்ந்துள்ளமைக்குக் காரணம் தெரியவில்லை. மத்திய வங்கி குறைவான விலைக்கே இன்னும் பவுண் விற்பனை செய்து வருகின்றது. சில பணம் சேமிப்பவர்கள் பவுண் தொகையினுல் பணத்தை சேகரித்து வைத்துள்ளமை பொது சந்தையில் பவுண் விலை அதிகமாகியுள்ளமைக்கு ஒரு காரணம் எனக்கொள்ளப்படுகின்றது.

## நேரு பதவி ஏற்கவேண்டும்!

வாஷிங்டன், செப். 25

ஐ. நா. பொதுக் காரியதரிசி பதவியை ஸ்ரீ நேரு ஏற்றுக்கொண்டால் சோவியத் யூனியன் 'முத்தரப்பு' நிர்வாகக் குழு என்ற பேச்சையே நிறுத்திக்கொள்ளும் என்று அமெரிக்க ஜனநாயக கட்சித் தலைவர் திரு. மான்ஸ்பீல்ட் தெரிவித்துள்ளார்.

நேரு போன்ற நேர்மையும் நியாயமும் உள்ள ஒருவர் பொதுக் காரியதரிசி பதவியை ஏற்ருல் சோவியத் யூனியன் 'முத்தரப்பு' நிர்வாகக் குழு நியமிக்க வேண்டும் என்று எப்படிக் கேட்க முடியும்? என்று திரு. மான்ஸ்பீல்ட் கூறினர்.

## எதியோப்பிய 'ஜெட்' விமானங்கள் உகண்டா சேர்ந்தன

உகண்டா, செப். 25

காங்கோவிலுள்ள ஐ. நா. படைகளுக்கு உதவியாக எதியோப்பியா அனுப்பிய நான்கு 'ஜெட்' போர் விமானங்கள் உகண்டா வந்து சேர்ந்துள்ளன. இனி இவை காங்கோ போய்ச்சேரும்.

---

பொன், செப். 25

மேற்கு ஜேர்மன் அதிபர் பதவியில் மேலும் நீடித்திருக்கும் முயற்சியாக 85 வயதான அடினேர் இன்று தமது நீண்டகால அரசியல் எதிரிகளான சோஷலிஸ ஜனநாயகக்கட்சித் தலைவர்களைச் சந்தித்துப் பேசுவார்.

## 3 வாக்குகளால் வெற்றி

### முல்லைத்தீவு பட்டினசபை உபதேர்தல் முடிவு

முள்ளியவளை, திங்கள்

முல்லைத்தீவுப் பட்டின சபையின் 4ம் வட்டார அங்கத்தவராயிருந்த ஜனப். ரி. எம். இபுருகிம். தொடர்ந்து 3 மாதம் சபைக்குச் செல்லாததால் ஏற்பட்ட காலியான இடத்துக்கு சனிக்கிழமை நடந்த உபதேர்தலில் ஜனப். ஏ. முகமதுமீரா சாகிபு (சமூன்) 3 அதிகப்படியான வாக்குகளால் வெற்றி பெற்ருர்.

அவரை எதிர்த்துப் போட்டியிட்ட திரு. ஏ. எம். கந்தையாவுக்கு 88 வாக்குகளும், ஜனப். சமூனுக்கு 91 வாக்குகளும் கிடைத்தன.

## ஆந்திரா - மைசூர் இணக்கம்

பங்களூர், செப். 25

மைசூரும் ஆந்திராவும் தங்கள் பிரதேசங்களிலுள்ள சில பகுதிகளை பரஸ்பரம் மாற்றிக் கொள்ள ஒப்புக்கொண்டுள்ளன.

10,000,000 மக்களும் விரும்பி வாங்குவன!
இலங்கை முழுவதும் புகழ் பரப்புவன!
எவை?

டொலர்

ALUMINIUM INDUSTRIES (CEYLON) LTD
ONE DOLLAR
DOLLAR BRAND

பவுண் அடையாளம் உள்ள
அலுமீனியப் பாத்திரங்களே!
ஏன்?

டொலர் அலுமினியம் மாற்று உயர்ந்தது சுத்தம் உள்ளது!

டொலர் அலுமினியம் அழகு அமைப்பு கண்கவர்ச்சி உள்ளது!!

டொலர் அலுமினியம் உறுதி உழைப்பு உத்தரவாதம் உள்ளது!!!

எல்லாவற்றிற்கும் மேல்

உங்கள் தாய்ப் பொன்னுட்டில் மாவிட்டபுரத்தில் நவீன முறையில் செய்யப்படுவது!

டொலர் பவுணை பார்த்து வாங்குங்கள்
எங்கும் கிடைக்கும்
டொலர் மாத்திரமே
உத்தரவாதமானது!

தயாரிக்குமிடம்:
அலுமினிய இன்டஸ்றீஸ் லிமி.,
மாவிட்டபுரம். யாழ்ப்பாணம்.
J. D. 3

# 'போட்டி பூசல்களை நீக்கி கூடிவாழவேண்டும்'

## சமயசேவைக் கூட்டத்தில் திரு. இராஜலிங்கம் பேச்சு

### தோட்டப்பகுதியில் விவேகானந்த சபையினர் சமயப் பிரசாரம்

நாவலப்பிட்டி, ஞாயிறு

தனிப்பட்ட மனிதன் எப்பொழுதும் முன்னேற்றம் அடைந்ததில்லை கூடி வாழ்ந்தால்தான் கோடி நன்மை உண்டு. மிருகங்கள்கூடக் கூடி வாழ்ந்து களிப்புறுகின்றன. ஆனல் மனிதன்தான் தன் இனத்தைக் கொன்று, ஒருவரை ஒருவர் கெடுத்து வாழ்க்கையை நரகமாக்குகின்றனர். இத்தகைய போட்டி பூசல்கள் நீங்கினல் நன்ருக வாழ்க்கையை நடத்தலாம். நல்ல வாழ்க்கைக்கான திட்டங்களையே சமயக் கோட்பாடுகள் கூறியிருக்கின்றன.

விவேகானந்தசபையின் உபதலைவர்களில் ஒருவரு இ. தொ. காங்கிரஸ் பிரமுகருமான திரு. கே. இராஜலிங்கம் கொத்மலையைச் சேர்ந்த இராசாத் தோட்டத்தில் நடைபெற்ற சமையசேவைக் கூட்டமொன்றில் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினர்.

இராசாத்தோட்டதுத் கண்டக்டர் திரு. கே. பொன்னையர் இக் கூட்டத்திற்கு தலைமை வகித்து பேச்சாளர்களை வரவேற்றுப் பேசினர்.

திரு. கே. ராஜலிங்கம் மேலும் கூறியதாவது:

தொழிலாளரின் காலம்முழுவதும் வயிற்றுக்கு உணவு தேடுவதில்தான் கழிகின்றது. விவேகானந்தர் கூறியது போன்று நல்ல உடல் வலிமை நமக்கு வேண்டும். வாழ்க்கையிலும் மாறுதல் ஏற்படவேண்டும். உலகிலுள்ள பெரியோர்கள் "ஏழைகளின் மத்தியில் தான் இறைவன் இருக்கின்றூர்" என்கின்றனர் உண்மையில் தொழிலாளர் சமூகம் ஈடேற செய்யும் சேவைதான் நம்மை உயர்நிலைக்கு அழைத்துச் செல்லும். ஏழை பங்காளன் இறைவன் நாடொன்று வாழ கேடொன்றுமில்லை. அயலவர்களையும் நேசித்து சகோதரர்களாக மதித்து நடப்பதே இறைவனை தொழுவதற்குச் சரியாகும்.

இக் கூட்டத்தில் ஆத்மஜோதி ஆசிரியர் திரு. நா. முத்தையா பேசுகையில் பின்வருமாறு கூறினர்:-

படித்தவர்கள் மத்தியில் இதுவரை சேவைசெய்துவந்த விவேகானந்த சபையினர் இப்பொழுது தங்கள் பணியைத் தோட்டப்பகுதிகளுக்கும் விஸ்தரித்திருப்பது வரவேற்கத்தக்கது. உண்மையில் இதுவரை காலம் எங்கே சமயப்பணி அவசியமோ அங்கே செய்யப்படவில்லை. இபொழுதுதான் விவேகானந்த சபை யென்ற பெயர் பொருத்தமாக அமைந்திருக்கிறது.

மக்கள் எல்லோரும் பொதுவாக நல்லவர்கள்தான் நல்ல சேர்க்கை, சூழ்நிலைகள் அமையாததினல்தான் தீய வழியில் செல்கிருர்கள். நாமும் நல்லவர்களுடன் இணைந்துகொண்டால் நல்லவர்களாகிவிடலாம். பூவுடன் சேர்ந்த நாரும் இறைவனை அடைகிறது. இறை நாம ஜபமும், இசைப் பாடல்களும் நம்மை இலகுவில் இறைவனுடன் தொடர்புகொள்ளச் செய்கின்றன. உடலில் நல்ல இரத்தம் இருக்கும்போதே நலலதைச் சாதிக்கவேண்டும். வாலிப வயது இதற்குப் பொருத்தமானது. கிழவரானபின் ஆண்டவனை நினைக்கலாம் என்றிருப்பது வீண். சுகபோகங்களை அனுபவிக்க முடியாததினல்தான் இப்படி வயோதிப வயதில் ஆண்டவனைச் சிந்திக்கலாம் என்கின்றனர்.

இவ் விழாவில் விவேகானந்த சபையின் பரீட்சா காரியதரிசி திரு. எம். சிவராஜா. திரு. வே. சிவஞானம் ஆகியோரும் பேசினர் திரு. எஸ். மார்க்கண்டேயர் இன்னிசை விருந்தளித்தார். திரு. வே. சிவஞானம் கூட்டுப் பிரார்த்தனை நடாத்தினர்.

---

## இந்தியச் சிற்பக் கலைச் செல்வங்கள்

### அபூர்வ கண்காட்சி

கோலோன், செப். 25

இந்நகரமியூஸியத்தின் ஆதரவில் ஒரு அற்புதமான கண்காட்சி சமீபத்தில் நடைபெற்றது. தென் கிழக்கு ஆசிய நாடுகளைச் சேர்ந்த சிற்பச் செல்வங்கள் இக் காட்சியில் இடம் பெற்றன. ஒவ்வொரு சிற்பமும் அழகிலும் வேலைப்பாட்டிலும் பிரமாதமாக விளங்கியதுடன் பார்ப்பவர்களின் கண்ணையும் கருத்தையும் கவருவதாக விளங்கின.

கம்போடியாவிலிருந்து கொண்டு வரப்பட்ட 12 வது நூற்ருண்டில் செய்யப்பட்ட ஒரு சிலை (தலை மட்டும் கொண்டது) மிக அபூர்வ வேலைப்பாட்டுடன் விளங்கியது. காந்தார சிற்பக் கலையை அடிப்படையாகக் கொண்ட பல சிலைகள் சலவைக் கல்லினல் தயாரிக்கப்பட்டவை மிகவும் பாராட்டுதல்களைப் பெற்றன. பலவிதத்தில் அமைக்கப்பட்ட புத்தருடைய சில உருவங்கள், கிரேக்க பாணி சேர்ந்த இந்திய சிலைகள் ஆகியவைகளும் இக் காட்சியில் இடம் பெற்றிருந்தன.

காக்கும் கடவுளான ஸ்ரீ விஷ்ணுவின் பலவித உருவங்கள் பார்ப்பவர்களைப் பரவசப்படுத்தும் என்பதில் சந்தேகமேயில்லை. ஒரு அழகிய யுவதியுடன் நடனமாடும் பாணியிலிருந்த கிருஷ்ண உருவம் அழகே உருவாக அமைந்திருந்தது. மரங்களில் மிகவேலைப்பாடுகள் செய்யப்பட்ட உருவச் சிலைகளும் இக் காட்சியில் வைக்கப்பட்டிருந்தன.

டாக்டர் மூல்லர் வில்மர் என்ற ஜெர்மன் புதைபொருள் ஆராய்ச்சி நிபுணர் ஏராளமான சிற்பங்களை சேகரித்து வைத்திருந்தார். அவர் தன் உயிலில் அவ்வளவையும் கோலோன் மியூசியத்திற்கு கொடுத்துவிடும்படி எழுதி வைத்துவிட்டுச் சென்ருர். "இந்தியச் சிற்பச் செல்வங்கள்" என்ற தலைப்பில் ஒரு புத்தகம் மேற்கு ஜெர்மனியில்வெளியிடப்பட்டிருக்கிறது. சிற்பங்களைப் பற்றிய முழு விபரங்களும் இதில் விபரிக்கப்பட்டுள்ளது.

## வானெலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

**செவ்வாய் 26-9-61**

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 தேர்ந்தஇசை, 7-30 திரைஇசை, 8-00 வயலின், 8-15 இஸ்லாமியகீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை, 2-45 ஒலிப்பதிவுகள், 3-00 பண்டாரநாயக்கா நினைவு தினம் - கொரகொல்ல அஞ்சல், 5-00 பிறந்த தின வாழ்த்துக்கள், 5-15 வளரும் பயிர், 5-45 திரை இசை, 6-15 கிராமசஞ்சிகை, 6-45 புல்லாங்குழல்.

இரவு 7-00 பாட்டு, 7-30 நேயர்விருப்பம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 இசைச் சித்திரம்: காலஞ் சென்ற பண்டாரநாயக்கா, 9-45 நாகஸ்வரம்.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2, இரவு 7-15.)

காலை 6-45 மங்களஇசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 வாத்தியஇசை, 7-10 நிகழ்ச்சிக் குறிப்புகள், 7-30 சிதம்பரம் ஆர். நாராயணசுவாமி - பாட்டு.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 1-00 கதம்பம், 1-50 வாத்தியஇசை, 2-10 சிதம்பரம் ஆர். நாராயணசுவாமி - பாட்டு.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடகசங்கீதம்), 5-45 இசைப் பயிற்சி, 6-15 கிராம நிகழ்ச்சிகள்.

இரவு 7-30 சென்னை அஞ்சல், 7-45 செம்பொன்னர் கோயில் ஆர். தக்ஷிணமூர்த்தி பிள்ளை - நாகஸ்வரம், 9-15 'காலையார் கோயில் ரதம்' - நாடகம், 9-30 மெல்லிசை 9-50 கவிச் சொல் கேளீர்.

---

## லொறி விபத்தில் ஒருவர் கை இழந்தார்

முள்ளியவளை, திங்கள்

தண்ணீரூற்றிலிருந்து மாங்குளத்துக்கு மரம் ஏற்றிச் சென்ற லொறி ஒன்று, மரங்களை இறக்கிவிட்டுத் திரும்பிவரும் வழியில், முள்ளியவளைக்குச் சமீபத்தில் விபத்துக்குள்ளாகியதால், கைதுண்டிக்கப்பட்ட நிலையில் ஒருவர் முல்லைத்தீவு ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு, அங்கிருந்து யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டார்.

சாரதியும் மற்ெருருவரும், சிறிய காயங்களுடன் உயிர் தப்பினர்.

மோனரு அன் ரோஸ் பப்படங்கள்

நாவிற்கு ருசியுடன் கைதேர்ந்த தொழிலாளர்களைக் கொண்டு தனிஉளுந்தில் சுகாதார முறைப்படி தயார் செய்யப்படுவது

MONARA PAPPADAM
TRADE MARK 19502

மோனரு
அன்
ரோஸ்
பப்படங்கள்
மூவர்ண கலர்
லேபிளுடன்
மயில் - ரோஸ்
அடையாள மிட்டு

ROSE FLOWER BRAND BEST PAPPADAM
REGD. TRADE MARK No 18255
A. M. BUHARI
133, 5th CROSS ST. COLOMBO.

இலங்கையில் எல்லா இடங்களிலும் விற்பனையாகிறது.

தயாரிப்பவர்கள்:
ஏ. எம். புகாரி அன் ரோஸ்
99, நாலாம் குறுக்குத் தெரு,
கொழும்பு.

## இலங்கை—இந்திய பாடசாலைகள் குத்துச் சண்டை போட்டி

கொழும்பு, ஞாயிறு
எம். ம. குணசேன கேடயத்துக்கான இலங்கை-இந்திய பாடசாலைகளின் குத்துச் சண்டைப் போட்டி நாளை மாலை 7 மணிக்கு கொழும்பு விகார மகாதேவி பார்க்கில் ஆரம்பமாகும். செவ்வாய்க்கிழமை பேராதனை பல்கலைக் கழகத்தில் அது தொடர்ந்து நடைபெறும்.

## தமிழ் நாட்டில் தேர்தலில் கலக்கும் கட்சிகள்

சென்னை, செப். 24
அடுத்த பொதுத்தேர்தலின் போது தமிழ்நாட்டில் தேர்தலில் கலந்து கொள்வதற்காக கீழ்க்கண்ட கட்சிகளுக்கு அனுமதியளிக்கப்பட்டிருக்கிறது.
காங்கிரஸ்கட்சி, பிரஜா சோஷலிஸ்ட்கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, சுதந்திரக்கட்சி, திராவிட முன்னேற்றக்கழகம்.

## முதலைவாயில் அகப்பட்டார்

பமுனுமுல்லை, திங்கள்
பமுனுமுல்லை என்ற இடத்தைச் சேர்ந்த பதிருஜா பொடிசிங்கோ அலியஸ் தண்டலி என்பவர் கல்துடி ஆற்றில் துணிகளைக் கழுவிக்கொண்டிருந்த சமயம் எதிர்பாராதவிதமாக அவரது வலது காலை ஒரு முதலை கௌவிக்கொண்டது. காயமடைந்த அவர் கொனருவ ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

குனேகா செண்டுகள்
வாழ்க்கை மலர்ச்சியுற உலகப் புகழ்பெற்ற
குனேகா மருக்கொழுந்து உபயோகித்து ஆனந்தமடையுங்கள்
தயாரிப்பவர்கள்:
குனேகா அடையார்
மதராஸ் 20.
இலங்கை சோல் ஏஜண்டுகள்:
ஜெகஜோதி அன் கோ,
குருநெனியா.




கிஸ்ஸெல் சாரி பேப்பிரிக்

உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் இப்புதிய சாரி பேப்பரிக்கின் அற்புதமான அழகொளியின் நிறங்களிலே முத்தின் மோகலப் பகட்டு துலங்குவதைக் காணலாம்; நன்கு கழுவிப் பாவிக்கக் கூடியது; கசங்காது, சுருங்காது:

மங்காத நிறமும் எடுப்பான டிசைனும் அணிபவரின் அழகுக்கு அழகூட்டுகிறது: எழிலான பல அழகிய அச்சடி மோஸ்தரிலும், நிறங்களிலும் கிஸ்ஸெல் சாரி பேப்பிரிக்கைப் பெற்றுக்கொள்ளலாம்.

ஏகவிநியோகஸ்தர்கள்: சி. டபிள்யூ. ஈ. கிடைக்குமிடம்.
சி.டபிள்யூ.ஈ. இலாக்கா ஸ்டோர். கோட்டை, கொழும்பு.
" மெக்கலம் ரோட்,
" மெயின் வீதி, புறக்கோட்டை;
" மருதானை மற்றும் வெளியூர்

கிஸ்ஸெல் சாரி பேப்பிரிக்-சிறந்த வாழ்வுக்கு சி. டபிள்யூ. ஈ. அறபணிக்கும் ஒன்றாகும்;

நினைவிருக்கட்டும். இப்பொழுதும், எப்பொழுதும் உங்களுக்கு சி. டபிள்யூ. ஈ. சேர்ந்த நல் பெறுமதியைத் தருகிறது.
CWE
TX/384

## கம்பளையில் கொள்ளைக்கூட்டம்
### மக்களிடையே பீதியும் திகலும்

கம்பளை, திங்கள்
கம்பளை நகரத்திலும், சுற்றுப் புறங்களிலும் ஆயுதம் தரித்த ஒரு கொள்ளைக் கூட்டத்தினர் தங்கள் கைவரிசைகளைக் காட்டி வருகின்றனர். வீடுகளை உடைத்து கொள்ளையடிக்கும் இக்கூட்டத்தினரால், கம்பளை வாசிகள் எல்லோருமே அஞ்சி வாழுகின்றனர்.

பொலிஸாரின் உதவியுடன் ஒரு தொண்டர் படையினரை உடனடியாகத் திரட்டவேண்டுமென்று கோரி ஒரு பிரேரணையை கம்பளை நகரசபை அங்கத்தவர் திரு. எஸ். எம். கருணாரத்ன கொண்டு வரும் பொழுது தான் மேற்கண்டவாறு அவர் கூறினர். இப் பிரேரணை நகரசபையின் மாதாந்தக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேறியது.

திரு. கருணாரத்ன இதுபற்றி மேலும் குறிப்பிட்டதாவது:-
"இக்கொள்ளைக் கூட்டம் திருடுவதுடன் மட்டும் நின்றுவிடுவதில்லை. சில வேளைகளில் வீட்டில் வசிப்போரிடம் பலாத்காரத்தில் இறங்கி கொள்ளையுமடிக்கிறார்கள். இதனல், பாதிக்கப்பட்ட மக்கள் பெருந்தொகையினராக இங்கு இருக்கிறார்கள். இப்பயங்கர கொள்ளைக் கூட்டத்தினரால் இங்கு வசிக்கும் மக்கள் அஞ்சி ஒடுங்கி வாழுகின்றார்கள். இன்று ஓர் இடத்தில் கொள்ளை நடைபெற்றால் நாளை எங்கு நடைபெறுமோ என்று தெரியாது பயந்து வாழ்கின்றனர். இங்குள்ள நிலைமை இதனல் மிகவும் மோசமானதாக இருக்கிறது. அமைதியை இங்கு நிலைநாட்ட வேண்டுமென்றால் பொலிஸார் தாமதிக்காது உடனேயே செயலில் இறங்கவேண்டும்."

## பள்ளிக்கூடங்களில் பிள்ளைகள் பிரவேசம்
### வித்தியாதிகாரியின் அறிக்கை

கொழும்பு, திங்கள்
அரசாங்கப் பள்ளிக்கூடங்களில் பிள்ளைகளின் பிரவேசத்துக்கான காலிஸ்தானங்களின் விபரங்கள்பற்றியும் பிள்ளைகளைப் பள்ளிக்கூடங்களில் எவ்வாறு சேர்த்துக்கொள்ள வேண்டும் என்பது பற்றியும் வித்தியாதிகாரி திரு. எஸ். எப். டி' சில்வா மிக விரைவில் ஒரு அறிக்கை வெளியிடுவார்.

அரசாங்க பள்ளிக்கூடங்களில் றோயல்கல்லூரிக்கும் றோயல்கல்லூரி ஆரம்பபாடசாலைக்குமே பெருந்தொகையான பிரவேச விண்ணப்பங்கள் அனுப்பப்படுகின்றன என கல்விப்பகுதி வட்டாரங்களால் அறியவருகின்றது.

பள்ளிக்கூடப் பிரவேசத்துக்கு வழக்கமாகக் கையாளப்பட்டு வரும் முறையே கையாளப்படும் என வித்தியாதிகாரி கூறியுள்ளார்.

பள்ளிக்கூடத்திலிருந்து இரண்டுமைல் எல்லைக்குள் வாழும் பிள்ளைகளுக்கே பிரவேச அனுமதி அளிக்குமாறு மத்திய மகாவித்தியாலய அதிபர்களை வித்தியாதிகாரி கேட்டுள்ளார். ஆரம்ப வகுப்புகளில் உள்ள மாணவர்கள் தொகை பற்றிய விபரங்களைக் கல்விப்பகுதிக்கு அனுப்பிவைக்குமாறும் வித்யாலய அதிகாரிகள் கேட்கப்பட்டுள்ளனர்.

கல்வி மந்திரி கேட்டுள்ள அறிக்கையொன்றைத் தேசிய கல்விக்கமிஷன் இன்னும் அவருக்கு அனுப்பிவைக்கவில்லையென்றும் அந்த அறிக்கை கிடைத்தபின்னரே மாணவர்களின் பள்ளிக்கூடப் பிரவேச வயதின் அளவு நிர்ணயிக்கப்படும் எனவும் வித்தியாதிகாரி கூறியுள்ளார். தேசியக் கல்விக் கமிஷனின் அறிக்கை பார்லிமெண்ட் அங்கீகாரத்தைப் பெற்ற பின்னர்தான் அமுல் செய்யப்படும்.

## அதிக விலைக்கு விற்றனர்
### அபராதமும்செலுத்தினர்

காலி, திங்கள்
காலி வோட் வீதியில் வசிக்கும் எம். எச். எம். நியல் என்பவர், அரைறாத்தல் நற்சீரகத்தின் கட்டுப்பாட்டுவிலை 43 சதமாகயிருக்கையில், அதை இரண்டு சதம் அதிகமாக (45) விற்பனை செய்ததாகக் குற்றம்சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் குற்றத்தை ஒப்புக்கொண்ட அவருக்கு காலிபதில் மேலதிக மாஜிஸ்திரேட் திரு. ஏ. எம். எம். தாவித் ரூ.50 அபராதம் விதித்தார்.

காலி செட்டியார் தெருவைச் சேர்ந்த ஈ. டி. ஏ. செயினறிஸ் என்பவர் ஒரு றாத்தல் கெத்தலியை நான்கு சதம் அதிகமாக விற்பனை செய்ததாகக் குற்றம்சாட்டப்பட்ட வழக்கில் தாம் குற்றவாளி என ஒப்புக்கொண்டார். மாஜிஸ்திரேட் அவருக்கு ரூ. 75 அபராதம் விதித்தார்.

## மண்சரிவால் மாண்டனர்

திருக்கோணமலை, திங்கள்
22 வயதுள்ள கதிர்காமத்தம்பி என்ற இளைஞர் மண்சரிவு ஏற்பட்டு மரணமானார். கதிர்காமத்தம்பியும் மற்றும் ஐந்துபேரும், ஆறடிஆழமுள்ள ஒரு குழியைத் தோண்டிக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது எதிர்பாராதவிதமாக மண்சரிவு ஏற்பட்டு அவர்கள் மீது மண்விழுந்தது. கதிர்காமத்தம்பியுடன் வேலைபார்த்த மற்றவர்கள் தெய்வாதீனமாக தப்பிவிட்டார்கள். ஆனல் கதிர்காமத்தம்பி அந்த மண்சரிவில் அகப்பட்டு மரணமானார்.

## பட்டின சபை உபதலைவர் தெரிவு

ஊர்காவற்றுறை, திங்கள்
ஊர்காவற்றுறை பட்டின சபையின் மாதாந்தக் கூட்டம் சென்ற சனிக்கிழமை, தலைவர் திரு. எஸ். தேவசகாயம் தலைமையில் நடைபெற்றபோது சபையின் உப-தலைவராக 3-ம் வட்டார அங்கத்தவர் திரு. எஸ். வடிவேலு ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ஊர்காவற்றுறை அரசினர் ஆஸ்பத்திரியில் பெண் வைத்தியர் ஒருவரை நியமிப்பதோடு காது, தொண்டை வைத்தியத்திற்கும் இடமளிக்கவேண்டுமெனச் சுகாதார மந்திரியைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

உதைபந்தாட்டம்:
## ஸ்ரீமுருகன் கோஷ்டி வெற்றி

ஊர்காவற்றுறை, திங்கள்
செல்வன் இ. சிவானந்தனைக் காப்டனாகக் கொண்ட சரவணை-'சனசமூக நிலைய'-இளைஞர் கோஷ்டிக்கும், செல்வன் க. சிவகுமாரனைக் காப்டனாகக் கொண்ட சரவணை ஸ்ரீ முருகன் 'வாசிகசாலை' இளைஞர் கோஷ்டிக்கும் இடையே சென்ற சனிக்கிழமை மாலை நடைபெற்ற உதை பந்தாட்டப் போட்டியில் ஸ்ரீ முருகன் கோஷ்டி வெற்றி பெற்றது. சரவணையில் நடைபெற்ற இப்போட்டிக்கு திரு. கு. பாலகிருஷ்ணன் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர். இரு தரப்பினரும் திறமையாக விளையாடி ரசிகர்களின் பாராட்டைப் பெற்றனர்.

ஆசிரியருக்கு கடிதம்

# காங்கேசன் சிமெந்து தொழிலாளர் சங்கம்

ஐயா! கடந்த 23-ம் திகதி தாங்கள் பிரசுரித்திருந்த காங்கேசன் சிமெந்து உற்பத்தித் தொழிலாளர் சங்க வருடாந்த பொதுக்கூட்ட நிகழ்ச்சியின் உண்மையான விபரத்தைக் கீழே கொடுத்திருக்கிறேம்.

கடந்த 20-ம் திகதி மாலை 4-30 மணியளவில் பொதுக் கூட்டம் சங்கத் தலைவர் திரு எஸ்.ஐ. விஜயநாயகம் தலைமையில் ஆரம்பமானது. நிகழ்ச்சி நிரலில் கடைசி நிகழ்ச்சியாக உத்தியோகத்தர் தெரிவு நடைபெறவேண்டியிருந்ததால் சங்கத் தலைவர் ஒரு தற்காலிகத் தலைவரை வைத்து தேர்தலை நடத்தும்படிகேட்டதற் கிணங்க திரு. வி. கந்தையா தெரிவு செய்யப்பட்டார்.

இதன் பின்னர் தேர்தல் ஆரம்பமானது. தலைவர் பதவிக்கு திருவாளர்கள் எஸ். ஐ. விஜயநாயகம், ஆர். அழகரத்தினம், கு. கதிரவேலு ஆகிய பெயர்கள் முறையே பிரேரிக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டன.

வாக்கெடுப்பிற்கு விடப்பட்ட போது, திரு.எஸ்.ஐ.விஜயநாயகத்திற்கு 139 வாக்குகளும், திரு.ஆர். அழகரத்தினத்துக்கு 117 வாக்குகளும் கிடைத்தன. எனவே தற்காலிகத் தலைவர் திரு. வி.கந்தையா, திரு.எஸ்.ஐ. விஜயநாயகம் அதிகப்படியான வாக்குகள் பெற்று சங்கத்தலைவராக தெரிவு செய்யப்பட்டிருக்கிறர் என்று தெரிவித்தார். அதைத் தொடர்ந்து ஒரு சிலர் கூட்டம் நடைபெற முடியாத முறையில் குழப்பம் விளைவித்தனர். பின் பெரும்பான்மையினர் சங்கக் காரியாலயத்தில் கூடி கீழ்க்காணுவோரை நடப்புவருட உத்தியோகத்தர்களாகத் தெரிவுசெய்தனர்.

தலைவர்: திரு. எஸ்.ஐ. விஜயநாயகம். உபதலைவர்: திரு. பூ. சின்னக்கிளி. இணைக்காரியதரிசிகள்: திரு. ஏ. காசிப்பிள்ளை, திரு. என். நாகராசா. தனாதிகாரி: மு. சண்முகம்.

இதைப் பார்த்துக்கொண்டிருந்த குழப்பம் செய்தவர்கள் தொழிற்சங்க சட்டத்துக்கு அமையாதமுறையில் தங்களுக்குள் உத்தியோகத்தர்களைத் தெரிவுசெய்து தங்களைத்தாங்களே திருப்தி செய்துகொண்டு சென்றனர்.

ந. நாகராசா
காங்கேசன் சிமெந்து உற்பத்தித் தொழிலாளர் சங்கக் காரியதரிசி.

---

## ரோம் நகரில் மகாநாடு
### குருஷ்சேவின் மருமகன் கலந்துகொள்கிறர்

ரோம், செப். 25

சோவியத் அரசாங்கப் பத்திரிகையான 'இஸ்வெஸ்தியா'வின் ஆசிரியரும் சோவியத் பிரதமர் குருஷ்சேவின் மருமகனுமான திரு. அயூபி தலைமையில் சோவியத் தூதுகோஷ்டியொன்று இன்று ரோம்நகர் வந்து சேர்ந்தது.

இத்தாலியில் நடைபெறவிருக்கும் உத்தியோகபூர்வமற்ற கிழக்கு - மேற்கு மகாநாடொன்றில் கலந்து கொள்வதற்காக இத்தூது கோஷ்டி வந்துள்ளது.

பிரிட்டிஷ் தொழிற் கட்சிப் பிரமுகரும் சமாதானத்துக்கான நோபல் பரிசு பெற்றவருமான திரு. நோபெல் பேக்கரும் இம்மகா நாட்டில் கலந்து கொள்வதற்காக ரோம் நகர் வந்துள்ளார்.

பெல்ஜியம், இத்தாலி, நோர்வே, சுவீடன் முதலிய நாடுகளும் இம் மகாநாட்டில் கலந்துகொள்கின்றன.

---

## தெதுருஓயா யானைவிரட்டும் முயற்சி

கொழும்பு, திங்கள்

தெதுருஓயாவில் யானை விரட்டும் முயற்சி மற்றொரு தடவை மேற்கொள்ளப்படுமென இது சம்பந்தமான கமிட்டியின் தலைவரான டாக்டர் ஸ்பிட்டல் கூறினர்.


மகத்தான 2-வது மாதம்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) விஜிதா (மஸ்கேலியா)

நவா (கொம்பனித்தெரு) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு)

ஸ்ரீ கிருஷ்ணு (திருகோணமலை) மொடர்ன் (பதுளை)

லக்ஷ்மி (இரத்தினபுரி) தீவொளி (நுவரேலியா)



சிவாஜி கணேசன்
ஜெமினி கணேசன்
எம். ஆர். ராதா
சாவித்திரி
நடித்த

பாவ மன்னிப்பு

மனோஹரா (யாழ்ப்பாணம்) தினசரி மாலை 6-30 க்கும் இரவு 9-30 க்கும் சனி, ஞாயிறு பிற்பகல் 2-30

ஜெமினி கணேசன், சரோஜாதேவி நடித்த

இல்லறமே நல்லறம்


---

## பாடசாலைக்கு சென்ற ஆசிரியர்
### வழியில் திடீர் மரணம்

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணம் மார்ட்டின் வீதியில் வசிப்பவரும் நாவாந்துறை கத்தோலிக்க பாடசாலையின் சிரேஷ்ட உதவியாசிரியருமான திரு. க. பஸ்தியாம்பிள்ளை என்பவர் காலை 9 மணியளவில் பாடசாலைக்குச் செல்லும் வழியில் யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரிக்கு முன்னல் செல்லும் வீதியில் துவிச்சக்கர வண்டியிலிருந்து தவறி விழுந்து, ஸ்தலத்திலேயே மரணமான பரிதாப சம்பவமொன்று நடைபெற்றிருக்கிறது. இதுசம்பந்தமாக திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். கனகரத்தினம் விசாரணை நடத்தினர்.

மேற்படி பாடசாலை ஆசிரியர் திரு. ஞானப்பிரகாசம் சாட்சியமளிக்கையில் காலஞ்சென்றவருக்குப் பின்னல் சுமார் 50 யார் தூரத்தில் தாம் சைக்கிளில் வந்து கொண்டிருந்ததாகவும், காலஞ்சென்றவர் சைக்கிளிலிருந்து தவறி விழுந்ததைக் கண்டு தாம் ஓடிச்சென்று அவரைத் தூக்கியதாகவும், உயிர் பிரிந்த நிலையில் காலஞ்சென்றவரை வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றதாகவும் குறிப்பிட்டார்.

காலஞ்சென்றவரின் மனைவியும், மூன்றுவது புதல்வரும் சாட்சியமளித்தனர்.

---

## கணவன்-மனைவி தகராறு
### நால்வரின் உயிரைப் பலி கொண்டது

கொழும்பு, திங்கள்

கணவனுக்கும் மனைவிக்கும் ஏற்பட்ட தகராறின் விளைவாக மூன்று பிள்ளைகளையும் கணவனையும் இழக்கவேண்டி நேரிட்ட பரிதாப சம்பவம் ஒன்று நிகழ்ந்துள்ளது.

சிறிவர்த்தன என்பவர் தமது மனைவிக்கும் தமக்கும் ஏற்பட்ட தகராறு காரணமாக தமது மூன்று பிள்ளைகளையும் வெட்டிக் கொன்றுவிட்டுதாமும் தற்கொலை செய்துகொண்டதாக பொலிஸ் தலைமைக்காரியாலயத்துக்குத் தகவல் கிடைத்துள்ளது.

---

## மர்ம மரணம்

மாஸ்கோ, செப். 25

ஐ. நா. பொதுக் காரியதரிசி திரு. ஹமர்ஷீல்ட் சென்ற விமானத்தில் தப்பிப்பிழைத்த ஹாரிஜுலியன் சனிக்கிழமையன்று காலையில் அண்டோலா ஆஸ்பத்திரியில் மாண்டதாக வந்த செய்தியைக் குறிப்பிட்டு மாஸ்கோ ரேடியோ இம்மரணத்தால் ஏதோ "மர்மம்" இருக்கிறதென்று கூறியது.

செப்டம்பர் 22-ல் அவர் உடல்நிலை குணமடைந்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனல் மறுநாளே அவரது மரணச்செய்தி அறிவிக்கப்பட்டிருப்பதை 'மாஸ்கோ' ரேடியோ குறிப்பிட்டது.

ஹாரிஜுலியன் ஐ. நா. மெய்க்காப்பாளராக இருந்தார்.

---

## அதிகாரிகள் கடத்தப்பட்டனர்.

சைகோன், செப். 25

கொழும்புத் திட்டத்தின்கீழ் தென் வியட்நாமில் கடமையாற்றிவந்த இரு ஆஸ்திரேலிய அதிகாரிகளை கம்யூனிஸ்ட் கொரில்லாக்கள் கடத்திச் சென்றதாகவும் இவர்கள் பின்னர் விடுதலை செய்யப்பட்டதாகவும் தென்வியட்நாம் அரசாங்கம் அறிவித்தது.

---

## கொசுவிளுல் ஏற்பட்ட அபாயம்

கொழும்பு, திங்கள்

கொழும்பு முகத்துவாரத்தைச் சேர்ந்த டபிள்யூ. ஏ. லீலாவதி என்னும் 13 வயதுச் சிறுமி இரவில் தனது பாடங்களைப் படித்துக்கொண்டிருந்தாள். அப்போது தன்னைக் கடித்த ஒரு நுளம்பைத் தனது புத்தகத்தினுல் தாக்க முயற்சித்தாள். குறி தவறி மேசையில் எரிந்துகொண்டிருந்த மண்எண்ணெய் லாந்தர் கவிழ்க்கப்பட்டு, அவளுடைய ஆடைகளில் தீப்பற்றியது. லீலாவதியின் தாயார் தீயை அணைத்த போதிலும் முழங்கால்களிலிருந்து தோள்வரை தீக்காயங்களோடு கொழும்பு பெரியாஸ்பத்திரியில் இச்சிறுமி அனுமதிக்கப்பட்டிருக்கிறள்.

---

## வானெலியில் ஒரு விலை மார்க்கெட்டில் இன்னெரு விலை

வத்தளை, திங்கள்

கருவாட்டு இறக்குமதியை அரசாங்கம் பொறுப்பேற்றதினல், முன்னர் தனிப்பட்ட கருவாட்டு இறக்குமதியாளர்களிடம் வேலை பார்த்தவர்கள் இப்போது வேலையில்லாது இருக்கிறர்கள். இவர்களுக்கு அரசாங்கம் வேறு வேலை கொடுக்க வேண்டுமென திரு. டி. ஜே. ஆர். ஜே. ஜயக்கொடி கொண்டு வந்த தீர்மானம் ஹெந்தலை கிராமச் சபையில் நிறைவேறியது.

---

## 250 தாய்மார் பரிதாபநிலை

கொழும்பு, திங்கள்

கந்தப்பொளை என்னுமிடத்தில் 250 தாய்மார்கள் குழந்தைகளுக்குப் பாலூட்ட முடியாதிருக்கின்றனர் என்று தகவல் கிடைத்ததைத்தொடர்ந்து இவர்களுக்குத் தேவையான பாலுணவை "ஹார்லிக்ஸ்"ஸ்தாபனத்தினர் இன்று காலை விரைந்துசென்று வழங்கினர்.

---

## கமக்காரர்களை தரகர்கள் சுரண்டுகின்றனர்

கொழும்பு, திங்கள்

நூற்றுக்குத் தொண்ணூற்றெண்பது வீதமான கமக்காரர்களைத் தரகர்கள் சுரண்டுகின்ற காரணத்தால், உத்தரவாத விலைத் திட்டத்தின் பயன் அடியோடு அற்றுப்போய்விடுகின்றதென்று ரத்தோட்டை எம். பி. திரு. கி. முனவீரா முறையிட்டதன் பேரில், காணி விவசாய மந்திரி உத்தரவாத விலைத்திட்டம் செயல்படும் வகையை ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட கமிட்டியிடம், ஆலோசனை கோரியுள்ளார். நெல் விவசாயிகளைத் தரகர்கள் கொள்ளையடிக்காத வகையில் எவ்வாறு பார்த்துக் கொள்ளலாம் என்று ஆலோசனைகூறும்படி உத்தரவாத விலை ஆராய்ச்சிக் கமிட்டி கேட்கப்பட்டுள்ளது.

உத்தரவாத விலைக்குக் குறைந்த விலையில் கமக்காரர்களிடம் தரகர்கள் நெல் வாங்கிக்கொள்வதற்கு பலநோக்கு கூட்டுறவுப் பண்டகசாலை நிர்வாகஸ்தர்கள் சிலரும் உடந்தையாகவிருக்கிறர்கள் என்று திரு. முனவீரா காணி விவசாய மந்திரிக்குக் கூறியுள்ளார்.

கமக்காரர்களிடம் உத்தரவாத விலை கொடுத்து நெல் வாங்கிக்கொள்ளாத கூட்டுறவுப பண்டகசாலை அதிகாரிகளுக்கு அரசாங்கம் போதிய தண்டனை விதிப்பதில்லையென்றும் திரு.முனவீரா மந்திரிக்குக் கூறியுள்ளார்.

திரு. முனவீராவை உத்தரவாத விலைத் திட்டக் கமிட்டி அங்கத்தவர் ஒருவராகக் காணி விவசாய மந்திரி நியமித்துள்ளார்.

---

## கடாங்கா ராணுவ அதிகாரிகள்
### காங்கோவுடன் சேர்ந்தனர்

லியப்போல்ட்வில்லி, செப். 25

கடாங்கா ராணுவத்தைச் சேர்ந்த நான்கு அதிகாரிகள் காங்கோ ராணுவத்துடன் சேர்ந்து கொண்டனர்.

கடாங்கா இராணுவத்துக்குத் தலைமை தாங்க அந்நிய ஐரோப்பிய அதிகாரிகள் மீண்டும் வந்திருப்பதால் அதிருப்தி யடைந்து அவர்கள் வெளியேறியதாகத் தெரிவித்தனராம்.

---

## கந்தரோடை சனசமூக நிலையம்

சுன்னுகம், திங்கள்

சுன்னுகம் கந்தரோடை சனசமூக நிலைய வருடாந்தப் பொதுக்கூட்டம் அண்மையில் நடைபெற்றபோது பின்வருவோர் புதுவருட உத்தியோகத்தர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்:-

தலைவர்: திரு. ச. விஜயானந்தம். உபதலைவர்: திரு. சு. துரைசிங்கம். காரியதரிசி: திரு. க. புவநேந்திரநாதன், உபகாரியதரிசி: திரு. அ. தற்புரானந்தம். தனாதிகாரி: திரு. ந. சுரேந்திரன், உப தனாதிகாரி: திரு. க. சோதிநாதன்

13 பேர் கொண்ட நிருவாக சபையும் அமைக்கப்பட்டுள்ளது.

'ஒன்றே குலம்' என்ற சமூக நாடகமொன்றை மிகவிரைவில் அரங்கேற்றுவதெனவும் முடிவு செய்யப்பட்டது.

---

## தாலிக்கொடி யாருடையது?

சுன்னுகம், திங்கள்

கடந்த ஞாயிற்றுக்கிழமை வல்லிபுர ஆழ்வார் கோயிலில் நடைபெற்ற தீர்த்தத்திருவிழாவின் போது 15 தங்கப்பவுண் நிறையுள்ள தாலிக்கொடி ஒன்று கண்டெடுக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

சுன்னுகம் வைத்தியசாலை பொறுப்பதிகாரியான அப்போதிக்கரி திரு. கே. இராசரத்தினம் இத் தாலிக்கொடியைக் கண்டெடுத்து அங்கு முகாமிட்டிருந்த பொலிஸ் நிலையத்தில் சப்-இன்ஸ்பெக்டர் திரு. நல்லையாவிடம் ஒப்படைத்து தகவல் புத்தகத்தில் பதிவு செய்துகொண்டதாகவும் அதனைத் தவறவிட்டவர்கள் பருத்தித்துறைப் பொலிஸில் விசாரித்துப் பெற்றுக்கொள்ளுமாறும் அறிவிக்கிறர்

---

வாஷிங்டன், செப். 23

இப்போதைய ஐ. நா. நெருக்கடியை நடுநிலைமை நாடுகள் சமாளிக்கும் முறை தான் கென்னடி சர்க்காரின் வருங்காலக் கொள்கையை உருவாக்குவதற்கு உதவியாக இருக்கும் என்று வாஷிங்டன் போஸ்ட் பத்திரிகையின் பிரபல நிருபர் முர்ரே மார்டர் எழுதுகிறர்.

---

ஐ. நா. செப். 23

ஐ. நா. வில் சீனவின் பிரதிநிதித்துவம் சம்பந்தமான இரு பிரச்சினைகளையும் ஐ. நா. பொதுச் சபையில் விவாதிப்பதென வோட்டெடுக்காமலே, நேற்றிரவு நடைபெற்ற கமிட்டி தீர்மானித்தது.

---


## தேவை

நல்ல அனுபவமுள்ள 'சிலிண்டர்' மெஷின் வேலை தெரிந்த ஒருவர் தேவை-ஈழநாடு லிமிட்டெட், த. பெ. என் 49, யாழ்ப்பாணம்.

நல்ல அனுபவமுள்ள கலர் அச்சுவேலைகள் செய்யக்கூடிய 'பிளேட்டின்' மெஷின் வேலை தெரிந்தவர் ஒருவர் தேவை: ஈழநாடு லிமிட்டெட், த. பெ. என் 49, யாழ்ப்பாணம்.


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1961-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 26-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.